பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

★ கூறைகள்
★ காஞ்சிபுரம்
★ பட்டு வேட்டி
★ பிளவுஸ் வகைகள்
மற்றும்
சுபமுகூர்த்த புடவைகளை
சுலபமே தெரிவுசெய்ய
சோபனா
ரெக்ஸ்ரைல்
16, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூபா 3-50

இன்றைய அறிமுகம்
நாளைய நாகரீகம்
இறக்குமதி செய்யப்பட்ட
சாறிகள்,
றெடிமேட் ஆடைகளை
நவீன டிசைன்களில்
மனம் போல்
பெற்றுக்கொள்ள
சோபனா
ரெக்ஸ்ரைல்
16, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

கலி 5ர்: சுக்கில ஸூ பங்குனி மீ 15 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1410 ஷஃபான் பிறை 30 (28-03-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 45

## அமைச்சர் ரஞ்சன் தகவல்:

# 9 ஆயிரம் தமிழ்ப் போராளிகளை படையில் சேர்ப்பதற்கு அரசு முடிவு!

### கூடுதல் சுயாட்சியும் வழங்கப்படும்

கொழும்பு, மார்ச் 28

தமிழ்ப் போராளிகள் அனைவரும் ஆயுத வழிமுறையில் பழக்கப் பட்டுப்போனவர்கள். ஆகவே அவர்களை — சுமார் 9 ஆயிரம் பேரை — இலங்கை இராணுவத்தில் சேர்த்துக் கொள்ள இலங்கை அரசு திட்டமிட்டு வருகிறது. - இப்படி வெளியுறவு அமைச்சரும் பாதுகாப்புத் துணை அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜேரத்னா தெரிவித்தார்.

தமிழ் மக்களுக்குக் கூடுதலான சுயாட்சி உரிமை வழங்குவது பற்றி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் நாம் ஓர் இணக்கத்துக்கு வருவோம் என்றும் அவர் சொன்னார்.

*"இந்திய அமைதிப்படை முற்றாக வெளியேறிவிட்டது. தமிழ் தேசிய இராணுவத்தின் பயமுறுத்தலும் இப்போது இல்லை. ஆகவே ஆயுதங்களை ஒப்படைக்கும்படி தமிழீழ விடுதலைப் புலிகளைக் கேட்டுக்கொள்ள இலங்கை அரசு திட்டமிட்டு வருகிறது." - என்றும் அவர் சொன்னார்.*

கொழும்பு கால்பேஸ் ஹோட்டலில் நேற்று முன்தினம் கலந்துரையாடல் நிகழ்ச்சி ஒன்றை வெளிநாட்டுச் செய்தியாளர் சங்கம் நடத்தியது.

அதில் கலந்துகொண்டு பேசுகையிலேயே திரு. விஜேரத்தினா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தமது பேச்சில் மேலும் தெரிவித்ததாவது:-

மோதலை உண்டுபண்ணக் கூடிய எதனையும் எதிர்காலத்தில் ஜனாதிபதி அனுமதிக்க மாட்டார். நான் அதில் பூரண நம்பிக்கை கொண்டுள்ளேன்.

அதிநவீன ஆயுதங்கள் இனி இராணுவத்துக்குத் தேவைப்

(5ஆம் பக்கம் பார்க்க)

## சனி- ஞாயிறு தினங்களிலும் கடைகளைத் திறக்கலாம்

### ஆனால் ஊழியருக்கு மேலதிக ஊதியம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

"யாழ். நகரக்கடைகள் சனிமுழுநாளும் ஞாயிறும் திறக்கலாம். ஆனால் கடமை செய்யும் ஊழியர்களுக்கு மேலதிக கொடுப்பனவு வழங்க வேண்டும்"

யாழ்நகர வர்த்தகர்களுடன் நடந்த பேச்சின்போது யாழ்- உதவித்தொழில் ஆணையாளர் திரு. க. சிவப்பிரகாசம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ் நகரில் தினமும் கடைகள் திறக்கலாம் என்றும் அதற்கு எந்த வித தடையும் இல்லை என்றும் அவர் வர்த்தகர்களிடம் தெரிவித்தார்.

வாரத்தில் ஐந்துநாட்களும் 8 மணித்தியாலமும், சனிக்கிழமையில் ஐந்து மணித்தியாலமும் ஊழியர்கள் வேலை செய்யலாம் அதற்கு கூடுதலாக வேலை செய்தால் மேலதிககொடுப்பனவு வழங்க வேண்டும் என்று ஆணையாளர் வர்த்தகர்களிடம் தெரிவித்தார். (இ-6-5-3)

## எண்கோண நினைவுத் தூபி ஒட்டுசுட்டானில் இன்று திறப்பு

புதுக்குடியிருப்பு மார்ச் 28

ஒட்டுசுட்டான் சிவன்கோவில் அருகில், அமைக்கப்பட்டுள்ள எண்கோண நினைவுத் தூபி, இன்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் மாத்தையாவால் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட உள்ளது.

வீரமரணம் அடைந்த கப்டன் தினேஸ், மற்றும் வீரவேங்கைகள் கார்த்திக், சுமன், இளங்கோ, அசீஸ், ராதா, சின்ன ஜீவன், தாசன் ஆகியோரின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள இத்தூபி முழுக்க முழுக்கப் பொதுமக்களின் முயற்சியினாலேயே உருவாக்கப்பட்டது. (தி-126)

## பாண், மா விலை அதிகரிப்பு!

கொழும்பு மார்ச், 28

பாணின் விலை 30 சதத்தினாலும் கோதுமை மாவின் விலை 90சதத்தினாலும் அதிகரிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

ஒரு இறாத்தல் பாணின் புதியவிலை 4 ரூபா 90 சதம்

ஒரு கிலோ கோதுமை மாவின் விலை 12 ரூபா 25 சதத்திலிருந்து 13 ரூபா 15 சதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

## பயிலுநர் ஆசிரியர் நியமனம் இன்றுடன் பூர்த்தியாகும்

யாழ்- மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பயிலுநர் ஆசிரியர்களுக்கு தற்காலிக நியமனக்கடிதங்கள் வழங்கும் வேலைகள் இன்று பூர்த்தி ஆகும் என்று கல்வித்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

13 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான தற்காலிக நியமனக்கடிதங்கள் வழங்கப்பட்டு அவர்கள் தம் கடமைகளை ஏற்றுவிட்டனர்.

இன்று பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்படும்.

முதலாம் தவணை முடிவுக்குள் சகலரும் பதவி ஏற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-3)

## "வலம்புரி" படகு இன்று காரைநகர் வந்து சேரும்!

நெடுந்தீவு, மார்ச் 28

நெடுந்தீவு குறிகட்டுவான் சேவையில்ஈடுபடும்பொருட்டு புதிய படகு "வலம்புரி" இன்று காரைநகர் கடற்படைத் தளத்திற்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

புதிய படகு சேவையை ஏப்ரல் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கக் கூடியதாக, கடற்படையினரிடமிருந்து இப் படகை நெடுஞ்சபலைகள் திணைக்கள உத்தியோகத்தர்கள் 30 ஆம் திகதியன்று கையேற்பார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (உ-111)

## பரீட்சைக்குத் தோற்ற இளைஞர் இன்று விடுவிப்பு

கொழும்பு, மார்ச் 28

இரத்மலானை தெகிவல நகர அபிவிருத்திச்சபைக் கட்டடத்தில்தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சுமார் நூறு இளைஞர்கள் இன்று அவர்களது பெற்றோர்களிடம் பாதுகாப்புப் படையினரால் ஒப்படைக்கப்படுவர்.

தடுத்து வைக்கப்பட்டிருக்

(5 ஆம்பக்கம் பார்க்க)

## கொடிதினம் அனுஷ்டிப்பு

யாழ் செஞ்சிலுவைச் சங்கத்தின் கொடிதினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

பாடசாலை மாணவர்கள் பொது இடங்களில் நின்று கொடிகளை விற்பனை செய்ததைக் காணக்கூடியதாக இருந்தது. [இ-7]

## மீண்டும் ரூ. 500 போலிநோட்டு

யாழ்ப்பாணத்தில் 500ரூபா போலி நோட்டுக்கள் மீண்டும் புழக்கத்தில் உள்ளன.

கடந்த 25ஆம் திகதி யாழ்-ரயில் நிலையத்தில் ஒருவரால் டிக்கட்டுக்காகக் கொடுக்கப்பட்ட 500 ரூபா நோட்டு போலியானது என்று கண்டுபிடிக்கப்பட்டது.

இதுசம்பந்தமாக ரயில்நிலைய அதிகாரி யாழ்- பொலிஸ் நிலையத்துக்குதகவல் கொடுத்திருந்தார். (இ-3)

## முச்சந்தி முரளி



சோதினை வைக்கிறவைக்கு இப்பிடி ஒரு புதிய சோதனை போலை....

## கேள்விக்கு என்ன பதில்? தடுமாறும் ஆசிரியர்கள்!

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ்ப்பாண மாவட்டத்தில் பணிபுரியும் ஆசிரியர்கள் கடந்த இரண்டு நாட்களாக தமது தலைகளைப் பிய்த்துக் கொண்டிருக்கிறார்கள்!

கல்விப் பகுதி அவர்களிடம் கேட்டிருக்கும் ஒரு சிறிய கேள்விக்கு எப்படிப் பதிலளிப்பது என்பது தெரியாமல் அவர்கள் தமது மண்டைகளை உடைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

சம்மதமா, சம்மதம் இல்லையா இந்த இரண்டில் எதனைப் பதிலாக எழுதுவது என்பது தெரியாமலே மாணவர்களுக்குப் பரீட்சைகள் வைத்து அனுபவம் கண்ட ஆசிரியர்கள் முழிக்கிறார்கள்.

கல்விப் பகுதி அவர்களிடம் கேட்டிருக்கும் கேள்வி என்ன தெரியுமா?

தங்களுக்கு மாகாணசபையின் கீழ் கடமையாற்ற சம்மதமா, சம்மதம் இல்லையா? — என்பதே அந்தச் சின்னக் கேள்வி.

என்ன நோக்கத்துக்காக, என்ன முடிவை எடுக்க கருதி எத்தகைய பின்னணியில் இந்தக் கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது என்பது குறித்து எதுவுமே அவர்களுக்குத் தெரியாது.

பலரும் பலவாறாகக் காரணங்களைத் தமக்குள் கற்பனை செய்து கொண்டு கேள்விக்கு என்ன பதில் என்று தெரியாமல் தடுமாறுகிறார்கள். ஆசிரியர்கள் மட்டுமல்ல அதிபர்களும் தான்! பதில் தருவதற்குத் தயக்கம் காட்டுகிறார்கள். [அ-69]

## திருமலை சிங்கள அகதிகள் விடயம்: ஹமீத் - புலிகள் நேற்றுப் பேச்சு

கொழும்பு, மார்ச் 28

விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் அமைச்சர் ஹமீத்திற்கும் இடையில் திருகோணமலையில் நேற்று பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன.

திருகோணமலை "பிரெட்ரிக்" கோட்டையில் உள்ள சிங்கள அகதிகளை அவர்களது சொந்த இடங்களில் குடியேற்றுவது தொடர்பாகவே இந்தப் பேச்சுக்கள் நடைபெற்றன.

இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது அரச தரப்பில் அமைச்சர் ஜனாப். ஏ. ஸி. எஸ். ஹமீத், வடக்கு, கிழக்கு மாகாண ஆளுநர் ஜெனரல் நளின் செனவிரத்ன ஆகியோரும் படை அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் குழுவுக்கு திருகோணமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. ரூபன் தலைமை வகித்தார்.

பேச்சுக்களின் போது திருகோணமலையில் குடியிருக்கும் சிங்கள பொதுமக்களுக்கு தீங்கு இழைக்கப்படாமல் தாம் பார்த்துக்கொள்வதாக புலிகள் உறுதியளித்தனர் என்று அரச தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை —

தமிழ் ஊழியர்களின் பாதுகாப்புக்கு விடுதலைப் புலிகள் உறுதிமொழி வழங்கியிருப்பதை அடுத்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை முதல் அவர்கள் பிரெட்ரிக் கோட்டையில் உள்ள செயலகத்துக்கு வேலைக்குச் செல்ல ஆரம்பித்துள்ளனர் என்று தெரிய வந்தது. (உ)

## குடாநாட்டில் அடகு நகைகள் நாளை முதல் மீளளிக்கப்படும்!

யாழ்ப்பாணம் மார்ச் 28

இன்று பலாலிக்கு வந்து சேரும் 2 ஆயிரத்து 611 அடகு நகைகளும் நாளை முதல் யா. பொலிஸ்தொடர்மாடிக் கட்டடத்தில் வைத்து உரியவர்களுக்கு வழங்கப்படவிருக்கின்றன.

முதல்தொகுதி நகைகள் இன்று பலாலி விமான நிலையத்துக்கு கொண்டு வரப்படும்

ஊர்காவற்றுறை மக்கள் வங்கிக் கிளையில் வைத்து அடகு நகைகளை மீளப்பெற 1989 செப்டெம்பர் 22 ஆம் திகதிவரை பணம் செலுத்தியோருக்கும்-

பருத்தித்துறை கிளையில் வைத்து 1989 செப்டெம்பர் 15 ஆம் திகதிவரை பணம் செலுத்தியவர்களுக்கும்-

வல்வெட்டித்துறை கிளையில் 1989 அக்டோபர் 13 ஆம் திகதி வரை பணம் செலுத்தியவர்களுக்கும் நகைகள் நாளைமுதல்மீளளிக்கப்படும்.

வல்வெட்டித்துறை கிளையில் ஒரு பகுதியினருக்குஉரிய நகைகள் வெள்ளிக்கிழமையன்றும் வழங்கப்படும்.

நெல்லியடிக்கிளையில் 1989 செப்டெம்பர் 15 ஆம் திகதி வரை பணம் செலுத்தியவர்களுக்கு 30 ஆம், 31 ஆம் திகதிகளில் நகைகள் மீளளிக்கப்படும்.

சுன்னாகக் கிளையில் 1989 அக்டோபர் 9 ஆம் திகதிவரை பணம் செலுத்தியவர்களுக்கு 30 ஆம், 31 ஆம் திகதிகளில் நகைகள் மீளளிக்கப்படும்.

காங்கேசன்துறை கிளையில் 1989 செப்டெம்பர் 22

(5ஆம் பக்கம் பார்க்க)

## மாவட்ட அபிவிருத்தி சபையின் கணக்கு வழக்குகளில் குளறுபடி!

### 2½ வருடமாகியும் சிக்கலைத் தீர்க்க முடியாத நிலை

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபையின் செயற்பாடுகள் 1987 ஆம் ஆண்டுடன் நிறுத்தப்பட்டுள்ளன. ஆனால் கோவைகள் இல்லாமையால் இன்றுவரை கணக்கு வழக்குகளை முடிக்க முடியாதுள்ளதாம்.

அபிவிருத்திச் சபையின் செயற்பாடுகள் 1987 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறுத்தப்பட்டு அதன் பொறுப்புகள் பிரதேசசபைகளுக்கும், உள்ளூராட்சி சபைகளுக்கும் ஒப்படைக்கப்பட்டன.

தற்சமயம் அபிவிருத்திச்சபையின் கணக்குகளை முடிப்பதற்கு விசேடமாக ஊழியர்கள் நியமிக்கப்பட்டு அவர்கள் யாழ் செயலகத்தில் செயற்பட்டு வருகிறார்கள்.

ஆனால் முக்கிய ஆவணங்கள்பல இல்லை என்பது இப்போதுதான் தெரியவந்திருக்கிறது.

யாழ் அபிவிருத்திசபைக்கு உட்பட்ட உடுப்பிட்டி, அராலி உள்ளூராட்சிசபைகளின் ஆவணங்கள் பல எரிந்து போய்விட்டதாலும் -

இடமாற்றத்தில் சென்ற

(5ஆம் பக்கம் பார்க்க)

## 20 ஆண்டுகளுக்கு ஒரு தடவை அடையாளக்கார்ட் புதுப்பிப்பு

### விரைவில் சட்டமூலம் வருகிறது

கொழும்பு, மார்ச் 28

தேசிய அடையாளக் கார்ட் 20 ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்கப்பட வேண்டும்.

இதனைக் கட்டாயப் படுத்தும் சட்ட மூலம் ஒன்று விரைவில் நாடாளு மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படும் என்று அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா தெரிவித்தார்.

தற்பொழுது வழங்கப்படும் தேசிய அடையாளக் கார்ட்டை ஆயுள் வரை பாவிக்கலாம். அதனைப் புதுப்பிக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

புதிய சட்டமூலம் கொண்டு வருவதற்கு தற்போதைய நாட்டின் பாதுகாப்பு நிலைமைதான் காரணம் என்று தெரிய வருகிறது.

## கொழும்பு - திருமலை விரைவில் விரைவு ரயில்!

திருகோணமலையில் புதிய விமானத்தளம் ஒன்று அமைக்கப்படும்.

கொழும்பு — திருமலைக்கு இடையே விரைவு ரயில்சேவை ஒன்றும் ஆரம்பிக்கப்படும்,

அரசு இதற்குரிய உறுதிமொழியை அளித்திருக்கிறது.

-இப்படி அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா தெரிவித்ததாக நேற்று பி.பி.ஸி. அறிவித்தது. (உ.எ)

## தீர்வு கிடைக்கும்! ஜனாதிபதி நம்பிக்கை

கொழும்பு, மார்ச் 28

இனப்பிரச்சினைக்கு நிலைத்திருக்கக்கூடிய தீர்வு ஒன்றைக் காணமுடியும் என்று நான் நம்புகிறேன். தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசு நடத்திவரும் பேச்சுக்களின் மூலம் இது சாத்தியமாகும் என்பது எனது நம்பிக்கை.

பல்வேறு பணிகளில் மக்களைப் பங்குகொள்ளச் செய்வதற்காக விடுதலைப் புலிகள் இயக்கம் தற்போது அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்திவருகிறது.

இவ்வாறு ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாச நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரசாங்க நாடாளுமன்றக் குழுவின் விசேட கூட்டத்தில்

(5ஆம் பக்கம் பார்க்க)

### சுப நேரம்

28-3-1990

புதன் கிழமை பங்குனி 15

சுபநேரம்:
04-44 முதல் 06-14 வரை

இராகுகாலம்
12-14 முதல் 1-44 வரை

இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்

### வியாழனன்று ரமழான் ஆரம்பம்

கொழும்பு மார்ச் 28

ரமழான் பண்டிகை நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகும்.

கொழும்பு பெரிய பள்ளி வாசலில் நேற்று மாலை நடைபெற்ற கதீப்மார் உலமாக்கள் ஆகியோரின் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது,

ரமழான் மாதம் முழுவதும் இஸ்லாமியப் பெருமக்கள் நோன்பு நோற்பார்கள் [அ]

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பலாலி றோட் C. T. Bக்கு அருகாமையில் 10 பரப்பு காணி கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. பகுதி, பகுதியாகவும் எடுக்கலாம். இல. 15, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (3037)

### கோழிக்குஞ்சு விநியோகம்

ஒரு நாள் Golden Come பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள். Hyline, வெள்ளை, பிறவுண், கறுப்பு பேட்டுக்குஞ்சுகள், Hisey பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் சேவற்குஞ்சுகள், புறொயிலர் குஞ்சுகள், ஒவ்வொரு வாரமும் முன் கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (2881)

### கோழிக்குஞ்சு விநியோகம் (UPLANDS FARM)

(Unsexed) தனி சிகப்பு கறுப்பு சேவல் (பிலிமத்) கறுப்பு (வரி)சேவல் (Lohman) பிறவுண் சேவல் வெள்ளை கறுப்பு பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் புறொயிலர் குஞ்சுகள் [28-3-1990] புதன்கிழமை விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. இல 9, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்திற்கு அருகில்) (12098)

### தேவை

யாழ் நகர மத்தியில் புதிதாக மறு சீரமைக்கப்பட இருக்கும் ஐஸ்கிறீம்சாலைக்கு பெண் ஊழியர்கள் தேவை. நகருக்கு அண்மையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. டில்கா கிறீம் கவுஸ், 404, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (3032)

றேடியோ, ரி. வி., டெக் திருத்துவதில் அனுபவம் உள்ளவர் தேவை. டில்கா றேடியோ ரி. வி ரெக்னீசியன்ஸ், 404/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (3033)

### உடன் தேவை

சமையல் வேலையில் அனுபவமுள்ளவர் தொடர்பு கொள்ளவும்: ஸ்ரீ கண்ணன் ஸ்ரோர்ஸ், பலாலி வீதி, திருநெல்வேலிசந்தி, திருநெல்வேலி. (3035)

### சேவை

சிறந்த முறையில் வீடியோ படம் பிடித்துக் கொள்ளவும், பாடல்கள் பதிவு செய்து கொள்ளவும் நாடுங்கள்: பாரத் வீடியோ சென்ரர், 51/1, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். (சி/4158)

### தவறிவிட்டது

அ. செல்வராணி, கல்லுவசரவெட்டி ஆகிய எனது அடையாள அட்டையும், பேசும் 750 இலக்க மினிபஸ்ஸில் 14-03-90 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன். (12225)

### சோதிட மாந்திரிக நிபுணர்

உங்கள் எவ்வகையான பிரச்சினைகளையும் உன்னதமான மட்டக்களப்பு ஆருட மாந்திரிகமுறைப்படி அரச அங்கீகாரம்பெற்றுள்ள பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரால் வெற்றிகரமாய் தீர்வு காணப்படும். தொடர்பு கொள்ளுங்கள்: "சக்தி சரவணா 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (யாழ் இந்துக் கல்லூரிமைதானம் முன்பாக) வியாழன் விடுமுறை. (3022)

### ரைப்பிங் சேவை

தமிழ், ஆங்கிலம், ரைப்பிங் மற்றும் Stencils cutting குறைந்த செலவில் ரைப்பிங் செய்து கொடுக்கப்படும். நாடுங்கள்: FUDO 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி/3452)

## விளை. போட்டி

தாளையடி மார்ச் 28

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள, விளையாட்டுசழகங்களுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டி இன்று 28 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

வத்திராயன் வடக்கு உதயசூரியன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். இப்போட்டியில் 20 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றுகின்றன. வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் திரு ரீ. சந்திரசேகரம் தலைமையில் போட்டி நடைபெறும்.

யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் பிரதமவிருந்தினராகவும், தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபர் திரு. க சண்முகநாதன் சிறப்பு விருந்தினராகவும் இப் போட்டியில் கலந்து கொள்வார்கள். (இ-144)

ஸ்கந்தவரோதயா-யாழ். இந்து கிரிக்கெட்.

## யாழ். இந்து இன்னிங்ஸ் வெற்றி. ஜெயராஜ் அபார ஆட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி அணிக்கெதிரான கிரிக்கெட் போட்டியில் யாழ் இந்துக் கல்லூரி அணி இன்னிங்ஸ் ஆலும் 39 ஓட்டங்களாலும் வெற்றி பெற்றது.

இப்போட்டியில் யாழ் இந்துவின் அணித்தலைவர் ந. ஜெயராஜ் சிறப்பாக ஆடி 127 ஓட்டங்களைப்பெற்றார். இதில் 23 பவுண்டறிகள் அடங்கி இருந்தன.

முதலில் துடுப்பெடுத்து ஆடிய ஸ்கந்தவரோதயா அணி 120 ஓட்டங்களைப் பெற்றது. பிரபுராம் 33 மதியழகன் 17, றொபின்சன் 14, சந்திரகுமார் 11, ஜெயகோபன் 11, ஓட்டங்களைப் பெற்றனர். பிரபாசரன் 5 விக்கட்டுகளையும் வரதன் 3 விக்கெட்டுகளையும் பிரதீபன் 2 விக்கட்டுகளையும், கைப்பற்றினர்.

யாழ் இந்து அணி தனது முதல் இன்னிங்ஸில் 215 ஓட்டங்களை 9 விக்கெட் இழப்பிற்கு பெற்ற நிலையில் ஆட்டத்தை நிறுத்தியது. ஜெயராஜ் 127, ஆர் வரதன் 23, கபிலன் 22, வரதன் 18, ஓட்டங்களைப் பெற்றனர். றொபின்சன் 3 விக்கெட்டுகளையும், ரவிக்குமார் 3 விக்கெட்டுகளையும் பிரபுராம் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து ஆடிய ஸ்கந்தவரோதயா அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 56 ஓட்டங்களையே பெற்றது. மதியழகன் 21, சந்திரகுமார் 16 ஓட்டங்களை பெற்றனர். நரேந்திரன் 4 விக்கெட்டுகளையும் வரதன், ஜெயதீபன் பிரதீபன் மூவரும் தலா 2 விக்கெட்டுகளை கைப்பற்றினர். (மு)

## வட்டு நூலக வாசகர் வட்டம்

யாழ்ப்பாணம் மார்ச் 28

வலிமேற்கு பிரதேச சபையின் வட்டுக்கோட்டை நூலகத்தில் இடவசதியும் தளபாடங்களும் போதியதாக இல்லாமல் இருக்கின்றன இதனால் நூலகத்தின் செயற்பாடு பெரிதும் பாதிக்கப்படுகின்றது. இது பற்றி யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளருடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அண்மையில் நடைபெற்ற நூலக வாசகர் வட்டத்தின் செயற்குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்திற்கு வாசகர் வட்டத்தலைவர் கலாநிதி வி. நித்தியானந்தன் தலைமை வகித்தார்.

எதிர்வரும் புத்தாண்டு தினத்தை ஒட்டி வாசகர் வட்டத்தின் சார்பில் நூலகம் பற்றிய கருத்தரங்கு, கலைநிகழ்ச்சி ஆகியவற்றை ஒழுங்கு செய்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது. (சு


## மக்கள் வங்கி

### அடகு நகைகள் மீளளித்தல்

### யாழ்ப்பாண மாவட்டம்

பின்வரும் கிளைகளில் அடகு வைத்து, மீளப் பெறுவதற்காகப் பணம் செலுத்தியவர்களது நகைகள் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு அருகில் இருக்கின்ற பொலிஸ் தொடர்மாடிக் கட்டடத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் வைத்து கீழ்க்கண்டவாறு விநியோகிக்கப்படும்,

| | வழங்கும் திகதி | கிழமை |
|---|---|---|
| 1. ஊர்காவற்றுறைக்கிளை (22-09-1989 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 29-03-1990 — | வியாழன் |
| 2. பருத்தித்துறைக் கிளை (15-09-1989 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 29-03-1990 — | வியாழன் |
| 3. வல்வெட்டித்துறைக்கிளை (13-10-1989 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 29-03-1990 —<br>30-03-1990 — | வியாழன்<br>வெள்ளி |
| 4. நெல்லியடிக் கிளை (15-09-1989 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 30-03-1990 —<br>31-03-1990 — | வெள்ளி<br>சனி |
| 5. சுன்னாகம் கிளை (09-10-1989 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 30-03-1990 —<br>31-03-1990 — | வெள்ளி<br>சனி |
| 6. காங்கேசன்துறைக் கிளை (22-09-89 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 31-03-1990 — | சனி |

மேற் குறிப்பிட்ட தினங்களில் காலை 8-30 மணி தொடக்கம் நண்பகல் 1-00 மணி வரை அடகு நகைகள் மீளளிக்கப்படும்.

அடகு வைத்தவர்கள் தமது அடையாள அட்டை, பணம் கட்டியதற்கான வங்கி இரசீது ஆகியவற்றுடன் சமுகந் தந்து நகைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள மற்றைய கிளைகளின் நகைகள் சித்திரை மாதம் 3 ஆம் திகதி முதல் மீளளிக்கப்படும். அது பற்றிய தகவல்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்,
பிராந்தியத் தலைமையகம்.

[சி-4093]



## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம்சந்தி — யாழ்ப்பாணம்.

A/L 90

மீட்டல் வினா - விடை

புவியியல் - குணராஜா

02 — 04 — 90 (2.00 மணி)

(சி/4171)



## நவீல்ட் பாடசாலை

கைதடி

விழிப்புலனிழந்தோர் கல்வி, புனர்வாழ்வு என்பனவற்றில் நாட்டம் கொண்டோர் வருகிற வெள்ளிக்கிழமை 30ஆம் திகதி காலை 9 மணிக்கு மேற்படி பாடசாலையில் நேரில் விண்ணப்பிக்கவும்.

தகைமை:- பட்டதாரிகள் கல்விப் பொதுத் தராதரம் (உயர் தரம்)

ஒரு மாத பயிற்சிக்குப் பின் தகைமை பெற்றோருக்கு வேலை வாய்ப்புண்டு
மற்றும் விபரங்கள் நேரில் விளக்கப்படும்:

[சி-4089] — அதிபர்


## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வி. தவநிதி (தவம்) நாகநாதன்

அன்னை அணைப்பில்: 29-11-1967 இறைவன் அடியில்: 21-03-1984

ஆண்டு ஆறு சென்றாலும் உங்கள் பாசமும் பண்பும் என்றும் எங்களை விட்டு அகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய விநாயகனை வேண்டும்.

பெற்றோர், சகோதரிகள்,
மைத்துனர்.

மண்கும்பான் மேற்கு,
வேலணை.

(2980)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் உயர்திரு

கனகரட்ணம் பரராஜசிங்கம்

(B. A Hons) S. L. A. S.

(முன்னாள் உதவி அரசாங்க அதிபர் - குச்சவெளி)

அவனியில்: 22 - 11 - 1943 அவனடியில் 07 - 04 - 1989

ஊருக்கு நன்மையாற்றி
உள்ளத்தில் உண்மையேற்றி
யாருக்கும் உதவியாற்றும்
அன்பனாம் எம்மவர்
பேருக்கும் பெருமை சேர்த்துப்
பெரும் புகழ் எய்திட்ட
அமரர் அவர்களே!
எம் இனிய உள்ளமே!
நீங்கள் எம்மை விட்டு அகன்றாலும்
நாம் உங்கள் நினைவால்
வருந்தி வாடுகிறோம்.

மனைவி, மகன்மார், உறவினர்கள்.

இல. 15, ஆடியபாதம் வீதி,
கல்வியன்காடு.

[சி-4155]


## இலங்கை வங்கி

### யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதி, 476 & 476ஏ யில் இருக்கும் இலங்கை வங்கி மேற் தரக்கிளை கட்டிடத்திற்கு உத்தேச இரண்டு தள புதிய கட்டிடப் பகுதி கட்டுவதற்கான ஒப்பந்தக்காரர்களின் முற்தகைமை

யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதி, 476 & 476ஏ யில் இருக்கும் இலங்கை வங்கி மேற்தரக்கிளைக் கட்டிடத்திற்கு உத்தேச இரண்டு தள புதிய கட்டிடப் பகுதியை ஒரு வருடத்திற்குள் கட்டிமுடிப்பதற்கான ஒப்பந்தக்காரர்களின் முற்தகைமையை அறிவதற்கு இலங்கை வங்கி விரும்புகின்றது.

முற்தகைமையை தெரிவிக்க விரும்புபவர்கள் பின்வரும் சான்றுகளைக் காட்ட வேண்டும்.

1. இலங்கையில் வியாபாரப் பெயர்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.
2. கடந்த மூன்று வருடங்களில் ரூபா 12 மில்லியன் மொத்தப் பெறுமதியுடைய இரண்டு தள அலுவலகக் கட்டிடங்களை அல்லது இரண்டு தள கட்டிட அலுவலகங்களுக்கு புதிய கட்டிடப் பகுதியை திருப்திகரமாக பூர்த்தி செய்திருக்க வேண்டும், என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.
3. விண்ணப்பகாரர் ரூபா 4 மில்லியன் பெறுமதியுடைய கட்டிட வேலையை மேற் கொள்வதற்கு நிதியியல் ஆற்றலை உடையவர் என்பதை வங்கியர்களிடம் இருந்து கடிதங்கள் மூலம் நிதியியல் உறுதிப்பாட்டை காட்ட வேண்டும்.
4. தேவையான ஊழியர்கள், இயந்திர சாதனக் கருவிகள் கிடைக்கப் பெற்றதாக உறுதிப்படுத்த வேண்டும்.
5. தொழில் நுட்ப ஆற்றல்.

முற்தகைமைகளை ஒப்புவிக்க விரும்பும் ஒப்பந்தக்காரர்கள் முற்தகைமை வினாக் கொத்துக்களை திருப்பிச் செலுத்தப்படாத கட்டணமாக ரூபா 250/- செலுத்தியதன் பின் வங்கியின் அலுவல்கள் நேரங்களில் இலங்கை வங்கி ஆதனங்கள் பகுதி முகாமையாளரிடமிருந்து (தொலை பேசி இல. 544310) 1990-04-20 வரை பெற்றுக் கொள்ளலாம்.

இந்த வங்கியின் அலுவல்கள் நேரங்கள் பின்வருமாறு:

திங்கட் கிழமை — 9.00 முற்பகல் — 1.00 பிற்பகல்
செவ்வாய்க் கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை — 9.00 முற்பகல் — 1.30 பிற்பகல்

பூர்த்தி செய்யப்பட்ட முற்தகைமை வினாக்கொத்து, இரு படிகளில் "யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி, 476 & 476ஏ யில் இருக்கும் இலங்கை வங்கி மேற்தரக் கிளைக் கட்டிடத்திற்கு உத்தேச இரண்டு தள புதிய கட்டிடப் பகுதி கட்டுவதற்கான ஒப்பந்தக்காரர்களின் முற்தகைமை" என கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக குறிப்பிட்டு தலைவர் கேள்வுச் சபை அமைச்சு, மே/பா முகாமையாளர், இலங்கை வங்கி ஆதனங்கள் பகுதி, 23ம் தளம், தலைமை அலுவலகக் கட்டிடம், 75 ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு -1 க்கு முகவரியிட்டு பதிவுத் தபாலில் 1990-05-04 இல் காலை 10 மணிக்கு முன்னர் சேரும்படி அனுப்பி வைக்க வேண்டும். அல்லது ஆதனங்கள் பகுதியில் இருக்கும் கேள்வுப் பெட்டியில் 1990-05-04 இல் காலை 10 மணிக்கு முன் வைப்பிடலி வேண்டும்.

இலங்கை வங்கி,
புதிய தலைமைக் கட்டிடம்,
75, ஜனாதிபதி மாவத்தை,
கொழும்பு - 1.

பொது முகாமையாளர்
இலங்கை வங்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

உண்டார்கண் அல்லது அடுநறாக் காமம் போல்
கண்டார் மகிழ் செய்தல் இன்று.

**பொருள்:**

கள், தன்னை உண்டவரிடத்தில் அல்லாமல் காமத்தைப் போல் தன்னைக் கண்டவரிடத்தில் மயக்கத்தை உண்டாக்குவதில்லையே?


# உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, தொலைபேசி: 2288
யாழ்ப்பாணம்.
28-03-1990 த. பெ. இலக்கம் : 23


## இனப் பிரச்சினைத் தீர்வு

இந்திய அமைதிப்படை வெளியேற்றத்தை வரவேற்று, இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (இடது) வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கும் கருப் பொருள், முக்கிய அம்சம், கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

இந்திய இராணுவத்தை வெளியேற்றுவதற்கு, சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் எவ்விதம் ஒன்றுபட்டுச் செயற்பட்டார்களோ, ஒற்றுமையாக நின்றார்களோ, அதேபோல, இனப்பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வு காண்பதற்கும் சகலரும் ஒன்றுபட்டுச் செயலாற்ற வேண்டும். அந்தத் தீர்வை விரைவில் சாத்தியமாக்க வேண்டும் — இதுவே அந்த அறிக்கையின் முக்கிய அம்சமாகும்.

இந்தக் கருத்து அரசாங்கத்தில், ஆட்சியில் உள்ளவர்கள் மனதில் நன்றாகப் பதியவேண்டும் அதே போல பெரும்பான்மைச் சிங்கள மக்கள் ஒவ்வொருவர் மனதிலும் நிரந்தரமாக ஊன்றி உறுதிபெற வேண்டும்.

இந்தியப் படையை எப்படியோ வெளியேற்றியாகி விட்டது. இனித்தமிழர்களை, சிறுபான்மையினரை அடக்கி ஆண்டு, அவர்களின் உரிமைகளைப் பறித்துக் கொள்வோம் என்று சிங்கள மக்கள் நன்றிகெட்டத் தனமாகச் செயற்பட முனையக்கூடாது; செயற்பட நினைக்கவும் கூடாது.

அவ்வாறு செய்வதற்குச் சிங்கள மக்களோ அல்லது அவர்களின் அரசியல் தலைவர்களோ, அரசாங்கமோ சூது செய்ய எண்ணினால், நாட்டில் மீண்டும் பெரும் போர் மூளும் என எச்சரிக்க விரும்புகிறோம். இதுவரை நிகழ்ந்தவைகளை விட மிகவும் தாக்கமுடனும் உறுதியுடனும் தமிழர்கள் தமது உரிமைகளுக்குப் போராடும் கட்டம் உருவாகும்.

தமிழர்களைத் தொடர்ந்து ஏமாற்றலாம்; நொறுக்குத் தீனி போன்ற சில சலுகைகளை வழங்கி ஏய்க்காட்டலாம்; சிங்களப் பேரினவாதத்தை அவர்கள் மீது திணிக்கலாம்; இரண்டாம் தரப் பிரசைகளாக வைத்திருக்கலாம் என்று எந்தச் சிங்களத் தலைவரும் நினைத்து விடலாகாது.

சிங்கள மக்களுக்கு உள்ள அத்தனை உரிமைகளும் தமிழர்களுக்கும் உண்டு என்பதை மறுதலித்த நிலையில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது கஷ்டம். தமிழ் மக்களும் இந்த மண்ணின் மைந்தர்கள்; அவர்களுக்கென ஒரு சொந்தத் தாயகம் உண்டு என்ற அடிப்படையை மறந்து அல்லது மறைத்து இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண முடியாது.

தமிழர்களும் இந்த நாட்டை ஆண்டவர்கள்; தங்களைத் தாமே ஆளும் உரிமை உடையவர்கள் என்பதை மறைத்தும் இனப்பிரச்சினைக்கு தீர்வு ஒன்றைக் காண்பதென்பது கல்லில் இருந்து நார் உரிக்க முற்படுவதாக முடியும். சிங்களவர்கள் அனுபவிக்கும் சகல உரிமைகளையும் அனுபவிக்க தமிழர்களும் உரித்துள்ளவர்கள், சம உரிமை உடையவர்கள் என்ற தெளிவான நிலையும் புரிந்துணர்வும் சிங்கள மக்கள் மனங்களில் மலர வேண்டும். தமிழ் மக்களின் அடிப்படை சனநாயக உரிமைகளை மதித்து சமத்துவத்தை நிலை நாட்டும் மனம் கொண்டு இனப்பிரச்சினைக்குரிய தீர்வை அணுக வேண்டும்.

இனப்பிரச்சினைத் தீர்வில், தமிழர் தாயகம் ஒன்று உண்டு என்பது அங்கீகரிக்கப்பட்டாக வேண்டும். அது போலவே அவர்களின் பாரம்பரிய பிரதேசங்களில் திட்டமிட்ட குடியேற்றங்களை நடத்துவதையும் நிறுத்தியாக வேண்டும்.

வாயால் தேனொழுகப் பேசி, தமிழர்களை மதி மயங்கச் செய்து, அவர்களது முதுகில் குத்தி வெற்றி கண்டு விடலாம் என்று எந்தச் சிங்களத் தலைவரும் நினைத்துவிடக் கூடாது.

தமிழர் பிரச்சினையை, இனப்பிரச்சினையை, நாட்டின் பிரதான பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கு இது நல்ல சந்தர்ப்பம். இது கடைசிச் சந்தர்ப்பமாகவும் அமையலாம்.

இதனை ஒவ்வொரு சிங்களப் பொதுமகனும் உணர்ந்து, தங்கள் தலைவர்களை கபடம் இல்லாத தூய்மையான மனதுடன் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணத் தூண்ட வேண்டும். வெண்ணெய் திரண்டு வரும்போது தாழியை உடைத்துவிட அனுமதிக்கக் கூடாது. இனப்பிரச்சினையை இழுத்தடிக்காமல் விரைந்து தீர்வு காண்பது அவசியம். காற்றுள்ள போதே தூற்றும் சமக்காரன் ஆக வேண்டியவர்கள் சிங்கள மக்களே!

## முறைசாராக் கல்விக்கு கிளிநொச்சியில் தனிப்பிரிவு

கிளிநொச்சி மார்ச் 28

கிளிநொச்சிகல்வித்திணைக்களத்தில் முறைசாராக் கல்விக்கு என புதிதாகஒருபிரிவு ஆரம்பிக்கப்பட உள்ளது.

இந்த புதிய பிரிவு அடுத்த மாதம் தொடக்கம் செயற்பட உள்ளது.

திரு. எஸ். சின்னத்துரை இதற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளார். (க-76)

## தடை செய்யப்பட்ட வீதி போக்குவரத்துக்கு திறப்பு

ஒட்டுசுட்டான் மார்ச் 28

முல்லைநகருக்கு அண்மையிலுள்ள பொலிஸ் நிலையம், இராணுவமுகாம் வீதி பொது மக்கள் போக்குவரத்திற்கு மீண்டும் திறந்துவிடப்பட்டுள்ளது.

கடந்த பல வருடங்களாக பொது மக்கள் இவ்வீதியால் போக்குவரத்து செய்வதைப் படையினர் தடுத்திருந்தனர்.

தடை செய்யப்பட்டதை அடுத்து சிலாவத்தை வீதி ஊடாகவே வாகனப் போக்குவரத்துக்கள் நடைபெற்றன. (க - 113)

## கமநல சேவை நிலையம்

தாளையடி, மார்ச் 28

அம்பன் கமநல சேவை நிலையத்தின் உப அலுவலகம் ஒன்று மருதங்கேணியில் அமைக்கப்படவுள்ளது.

உப அலுவலகத்துடன் சேர்ந்து, உரக்களஞ்சியமும் அமைக்கப்படவுள்ளது.

யாழ் மாவட்ட கமநல சேவை நிலையத்தின் உதவி ஆணையாளர் திரு. சிவசுவாம் இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

(க - 144)

## புதிய பாடசாலை

தாளையடி மார்ச் 28

கிளிநொச்சி மாவட்டத்தில் புதிய பாடசாலை ஒன்று திறந்து வைக்கப்படுகின்றது.

உருத்திரபுரம கொத்தணியில் ஊற்றுப்புலம் கதிரவேலு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையே புதிதாக இன்று 28 ஆம் திகதி புதன்கிழமை திறந்து வைக்கப்படுகின்றது.

இப்பாடசாலையுடன் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பாடசாலையின் தொகை 80 ஆக உயர்ந்துள்ளது. (க-144)

## மார்பு நோய் சிகிச்சை நேர அட்டவணை

யாழ்ப்பாணம் மார்ச் 28

மார்பு நோய் பிராந்திய நிலையங்களில் கீழ்வரும் அட்டவணைப்படி வாரநாட்களில் சிகிச்சை பெறலாம் என அறிவிக்கப்படுகிறது.

மாதத்தின் முதல் செவ்வாய்க்கிழமை காலை; தெல்லிப்பழை ஆஸ்பத்திரி, மாதத்தின் 2 ஆம் செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை ஆஸ்பத்திரி, மாதத்தின்3 ஆம் செவ்வாய்க்கிழமை; சங்கானை ஆஸ்பத்திரி, மாதத்தின் 3 ஆம் புதன்கிழமை; கிளிநொச்சி.

வாரத்தின் ஒவ்வொரு வியாழக்கிழமையும் மயிலிட்டி ஆஸ்பத்திரி. (க-6)

## சமய நிகழ்ச்சிகளில்

### அலங்கார உற்சவம்

வட்டுக்கோட்டை மார்ச் 28

வட்டுக்கோட்டை வீயோடை முத்துமாரி அம்மன் கோவில் அலங்கார உற்சவம் நாளை வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு ஸ்நமன கும்பாபிஷேகத்துடன் ஆரம்பமாகி இரவு 7.30 மணிக்கு அம்பாள் சிம்ம வாகனத்தில் வீதி உலா வருவார். இவ்வாலயத்தில் 10 திருவிழா நடைபெறும். (க 161)

# உதவி அரச அதிபர்கள் ஊடாக ரூ. 15,000 நன்கொடைப் பணம்

### 17 ஆயிரம் குடும்பங்களுக்கு கிடைக்கும்

யாழ்ப்பாணம், மார்ச் 28

சேதமடைந்த வீடுகளைத் திருத்துவதற்கான நன்கொடைப்பணம் உதவி அரசாங்க அதிபர்களினால் இனி வழங்கப்படவிருக்கிறது.

இந்த நன்கொடைப்பணமான 15 ஆயிரம் ரூபா இது வரை யாழ் மாவட்டத்தில் 762 பேருக்கு ரூபா 89 லட்சம் வழங்கப்பட்டுள்ளது

யாழ் மாவட்டத்தில் 17 ஆயிரம் குடும்பங்களுக்கு இந்த நன்கொடைப்பணம் வழங்க வேண்டியுள்ளதால், கொடுப்பனவுகள் உதவி அரசாங்க அதிபர் மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அரசாங்க செயலகத்தால் மேற்கொள்ளப்பட்ட இந்தக் கொடுப்பனவு இனி உதவி அரசாங்க அதிபர் பெயரில் வங்கியில் கணக்கு ஆரம்பிக்கப்பட்டு அவர்கள் மூலம் வழங்கப்படும் என்று அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் தெரிவித்தார்.

ரூ. 1 கோடி பணம் தற்சமயம் உள்ளதாகவும், அப்பணம் விரைவில் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-3)

## அந்தக் கடனுக்கு எவரும் விண்ணப்பிக்கவில்லை!

யாழ்ப்பாணம், மார்ச் 28

அடகு நகைகளை மீளப் பெறமுடியாது கஷ்ட நிலையில் உள்ளவர்களுக்கு உதவும் வகையில் மக்கள் வங்கி அறிவித்த கடன் திட்டத்தின் கீழ் சலுகை பெற எவரும் இதுவரை விண்ணப்பிக்கவில்லை.

அடகு வைத்த பெறுமதியுடன் வட்டியைச் சேர்ந்து வரும் தொகையில் பத்தில் ஒருபங்கான தொகையை அடகு வைத்தவர் வங்கியில் செலுத்தி வட்டியில்லாத, ஐந்து வருடத்துக்குள் மீளச் செலுத்தக் கூடிய கடனைப் பெற சலுகை வழங்கப்பட்டிருந்தது. (இ-3)

## பாலபண்டித, பண்டித வகுப்பு

யாழ்ப்பாணம் மார்ச் 28

வண்ணார்பண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 2.30 மணி வரை, பால பண்டித, பண்டித வகுப்புக்கள் இலவசமாக நடத்தப்படுகின்றன.

நாவலர் சைவத் தமிழ்ப் பண்பாட்டு நிலையத்தினர் நடத்தும் இவ்வகுப்புகளில் பிரவேச பரீட்சை, ஜி. சி. ஈ உ. த. பரீட்சை, ஆகியவற்றில் சித்தி எய்தியவர்களும், ஆசிரிய பயிற்சி பெற்றவர்களும் சேர்ந்து பயிலலாம்.

விண்ணப்பப் படிவங்களை வண்ணார்பண்ணை நாவலர் மகா வித்தியாலய அதிபர் திரு ப. சிவஞான சுப்பிரமணியம் அவர்களிடம் இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம். (க)

## உடற்பயிற்சி

வல்வெட்டித்துறை மார்ச் 28

வல்வை மகளிர் மகாவித்தியாலயத்தில் உடற்பயிற்சி ஆசிரியை இல்லாத குறை நீக்கப்பட்டுவிட்டது. செல்வி எஸ். முத்துச்சாமியை சல்விப்பகுதி உடற்பயிற்சி ஆசிரியையாக நியமித்துள்ளது. (க-160)

## சட்டத்தரணிகளுக்குக் கடன்

யாழ்ப்பாணம் மார்ச் 28

சட்டத்தரணிகள் தம் அலுவலகங்களை புனரமைக்க அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்ய மக்கள் வங்கி கடன் வழங்க முன்வந்துள்ளது.

இந்தக்கடன் 25 ஆயிரம் ரூபாவுக்குள்ளே 54 மாதத்தில் திருப்பி செலுத்தக்கூடியதாக 20 சத வீத வட்டிக்கு வழங்கப்படும்.

கடனை யாழ் மக்கள்வங்கி பிரதான வீதிக்கிளையில் மட்டுமே பெறமுடியும் என தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## இளம் விவசாயிகளுக்கு வதிவிடப் பயிற்சி முகாம்

### ஏப்ரல் 23 இல் ஆரம்பம்

திருகோணமலை, மார்ச் 28

வடக்கு - கிழக்கு மாகாணகாணி, விவசாய அமைச்சு சர்வோதயத்துடன் இணைந்து இளம் விவசாயிகளுக்கான வதிவிடப் பயிற்சி முகாம் ஒன்றை ஏப்ரல் 23 ஆம் திகதி தொடக்கம் மூன்று வாரங்களுக்கு நடாத்தவுள்ளதாக அமைச்சின் பதில் செயலாளர் கலாநிதி என். விக்னராசா தெரிவித்தார்.

உப்புவெளி விவசாயப் பண்ணையிலும் சர்வோதய டணிமனையிலும் இடம் பெறும் இப் பயிற்சி முகாமில் விவசாய உற்பத்தி, கால் நடை வளர்ப்பு, கமநல சேவைகள், காணிஅபிவிருத்தி நிர்வாகம், வங்கித்துறை, சந்தைப் படுத்தல் ஆகிய விடயங்களில் பயிற்சி அளிக்கப்படும்.

ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் தலா நான்கு பேர் பயிற்சி முகாமுக்கு தெரிவு செய்யப்படவுள்ளார்கள்.

மாவட்ட மட்டத்திலும் இத்தகைய பயிற்சி முகாம்களை நடத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கலாநிதி என். விக்னராசா தெரிவித்தார். (இ)

## பாராட்டுவிழா

சாவகச்சேரி மார்ச் 28

ஸ்ரீகணேசானந்தா மகா தேவசுவாமிகளுக்கு சாவகச்சேரி திவ்யஜீவன சங்கத் தலைவர் ஆத்மஜோதி ஆசிரியர் திரு.நா. முத்தையா தலைமையில் பெரியமாவடிக் கந்தசுவாமி கோவிலில் பாராட்டு விழா நடத்தப்பட்டது. (இ-31)

## மார்பு நோய் பரிசோதனை

யாழ்ப்பாணம் மார்ச் 28

யாழ்ப்பாணம் மார்பு நோய் சிகிச்சை நிலையத்தில் மார்பு நோய் சம்பந்தமான வைத்திய பரிசோதனை வாரநாட்களில் திங்கள், வெள்ளி ஆகிய இரு நாட்களிலும் நடைபெறுகின்றன என்று அறிவிக்கப்படுகிறது. (க-6)

## வாசகர் திருமுகம்

### மாற்றுவார்களா?

முல்லைத்தீவு மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கடிதத்தலைப்பில் "முல்லைத்தீவு" "முல்லீத்தீவு" என அச்சிடப்பட்டுள்ளது. அத்துடன் ஆங்கிலமும் அரேபாணியில் MULLAITTIVU க்குப்பதில் MULLAITHIVE.

இதை மாற்ற நடவடிக்கை எடுப்பார்களா?

—எஸ். பி. சாமி
முல்லைத்தீவு

### சைக்கிள் தொல்லை

சாவகச்சேரி நவீன சந்தைக்கு முன்னால் சைக்கிளை நிறுத்துவதால் தொல்லைகள் ஏற்படுகின்றன. சண்டி வீதியில் பயணம் செய்வது சிரமமாக இருக்கின்றது.

"வாகனங்கள் நிறுத்தக்கூடாது என விளம்பர பலகை மூலம் நகரசபை அறிவித்தும் இதை யாரும் கவனிப்பதாகத் தெரியவில்லை.

இவ்விடத்தில் வாகனங்கள் நிறுத்தப்படுவதால் எந்த நேரமும் விபத்து நடைபெறலாம்.

சைக்கிள் பாவனையாளர்கள் கவனிப்பார்களா?

ஐ. கிருஷ்ணர்
பச்சிலைப்பள்ளி

### நடைபாதை வியாபாரிகள்

நடைபாதை வியாபாரிகள் தொல்லை யாழ் நகரில் அதிகரித்து வருகின்றது. யாழ் ஆஸ்பத்திரி வீதியிலே இவை அதிகரித்திருக்கின்றன.

ஆஸ்பத்திரிக்கு அவசர நோயாளரை எடுத்துச் செல்வதற்கோ விபத்துக்களில் சிக்காது பாதுகாப்பாக மக்கள் நடமாடவோ இதுபெரும் இடையூறாக உள்ளது.

இதை ஒழுங்குபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

-எஸ். செல்வம்
திருநெல்வேலி

## கூட்டம்

யாழ்ப்பாணம் மார்ச் 28

சென் ஜோன்ஸ் அம்புலன்சின் விசேஷ கூட்டம் இன்று புதன்கிழமை பிற்பகல் 5.00 மணிக்கு அதன் தலைமைக் காரியாலயத்தில் நடைபெறும். (இ-தி)

## தற்கொலைகளும் கொலைகளும் யாழ் மாவட்டத்தில் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ் மாவட்டத்தில் வாகன விபத்து மரணங்கள் குறைந்துள்ள போதிலும் தற்கொலைகளும் கொலைகளும் அதிகரித்துள்ளன.

கடந்த இரு மாதங்களில் 19 பேர் தற்கொலை புரிந்துள்ளனர். அதேவேளை யாழ் பகுதியில் 30 கொலைகள் இடம்பெற்றுள்ளன எட்டு விபத்து மரணங்கள் ஏற்பட்டன.

கடந்த இரண்டு மாதங்களில் 62 அகால மரணங்கள் இடம்பெற்றுள்ளன. (க-)

# கடந்தகால நெருக்கடியின் பின் இன்று மகிழ்ச்சியான சூழ்நிலை

### பாப்பரசரின் பிரதிநிதி கூறுகிறார்.

குருநகர், மார்ச் 28

கடந்த கால நெருக்கடியின் பின்பு தற்போது மகிழ்ச்சியான சூழ்நிலை தோன்றி இருக்கிறது. இலங்கையின் சகல பகுதி மக்கள் மத்தியிலும் இது ஏற்பட வேண்டும்.

பாப்பரசரின் பிரதிநிதி கலாநிதி அதிவந்பிரான் சுவாபக்கே அடிகள் திங்கள் இரவு யாழ்-மரியன்னை தேவாலய வளவில் கத்தோலிக்க பொது மக்களால் வழங்கப்பட்ட பொது வரவேற்பின்போது மேறகண்டவாறு கூறினார்.

யாழ் - ஆயர் கலாநிதி மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகை தலைமையில் வைபவம் நடைபெற்றது.

பிரதிநிதி ஆங்கிலத்தில் நிகழ்த்திய உரையை யாழ்-மறை வட்ட மனித முன்னேற்றநடுநிலைய இயக்குனர் வண. எம். ஈ. பயஸ்அடிகளார் தமிழாக்கினார்.

பாப்பரசரின் தூதுவர் அதிவந்பிரான் சுவாபக்கே தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"மகிழ்ச்சியானது உள்ளத்தில் ஆழ்ந்த ஒன்றாக இருக்க வேண்டும். அந்த மகிழ்ச்சியை இயேசுகிறிஸ்துவோடு இணைந்து அனுபவிக்க ஆசிகூறகிறேன். எனக்கு வழங்கப்பட்ட வரவேற்பு மூலம் தங்கள் ஆழ்ந்த பக்தியைத் தரிசிக்க முடிகிறது. இந்த விசுவாசத்தையும் பக்தியையும் கொழும்பு சென்றதும் அங்கிருந்து உடனடியாகப் பாப்பரசருடன் தொடர்பு கொண்டு தெரிவிப்பேன். அவர் மிகவும் மகிழ்ச்சி அடைவார்.

இப்படி அவர் கூறினார்.

தலைமையுரையில் யாழ். ஆயர் கலாநிதி மேதகு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை கூறியதாவது:

"1844 ஆம் ஆண்டுகளில் கொழும்பு - யாழ்ப்பாணம் என்று விளங்கிய எமது திருச்சபை இப்பொழுது இங்கே மட்டும் ஆறு மேற்றாசனங்களைக் கொண்டதாக வளர்ந்துள்ளது.

திருமலை, மட்டக்களப்பு, மன்னார், அனுராதபுரம், குருநாகல், யாழ்ப்பாணம் ஆகிய ஆறு மேற்றாசனங்களிலும் பெரும் எண்ணிக்கையான கிறிஸ்தவர்களும் குருக்களும் வளர்ந்திருக்கிறார்கள்.

பரிசுத்த யோசெப் வாஸ் சுவாமிகள், அமலமரித்தியாகிகள் போன்ற சமய விசுவாசிகள் கத்தோலிக்கத்தை இங்கே வேரூன்ற வைத்தமை பாப்பரசருக்கு நீங்கள் எடுத்துக் கூற வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்."

இப்படி அவர் கூறினார்.

ஆசிரியர் அகஸ்ரின் வாழ்த்துப் பத்திரம் ஒன்றை வாசித்து வழங்கினார்.

பேராலயப் பங்குத் தந்தை வண. ஹில்லறி ஜெபநேசன் நன்றியுரையில் "நானே வழியும் உயிரும்" என்று கூறிய யேசுகிறிஸ்துவின் வழி நின்று சமய வளர்ச்சிக்குப் பாடுபடக்காத்திருக்கிறோம்." எனத் தெரிவித்தார்.

கலை நிகழ்ச்சியில் திருமறைக் கலாமன்றத்தின் "இரத்தக் கடன்" நாட்டுக் கூத்தும், சிறுவர் ஆடல், பாடல்களும் இடம்பெற்றன. (இ - 51)

## நாணய மாற்று விகிதம்

26-3-1990

இலங்கை மத்திய வங்கிக்கும் வர்த்தக வங்கிகளுக்கும் இடையிலான உடன் மாற்றுவிகிதம்:-

| | | வாங்குதல் | விற்றல் |
|---|---|---|---|
| 100 | இந்திய ரூபா | 233.31 | 234 28 |
| 100 | அமெரிக்க டொலர் | 3996.95 | 4003 05 |
| 100 | ஸ்ரேர்லிங் பவுண்ட் | 6379.52 | 6412 80 |
| 100 | ஜேர்மன் மார்க் | 2318.35 | 2338 71 |
| 100 | பிரெஞ்சு பிராங் | 681.88 | 697.30 |
| 100 | ஜப்பானிய யென் | 25.4677 | 25.7263 |

### அச்சுவேலியில்

## ஜே.ஆர்-ராஜீவ்-வரதர் கொடும்பாவிகள் எரிப்பு

அச்சுவேலி மார்ச் 28

ஜே. ஆர் - ராஜீவ் - வரதர் ஆகியோரின் கொடும்பாவிகள் அச்சுவேலி பஸ் நிலையத்தில் வைத்து பொது மக்களினால் எரிக்கப்பட்டன. கடந்த திங்கள் பிற்பகல் இச்சம்பவம் இடம்பெற்றது.

கொடும்பாவிகள் எரிக்கப்படுவதற்கு முன் புத்தூர் சந்தியில் இருந்து ஊர்வலமாக வீதி வழியாக எடுத்து வரப்பட்டன.

ஊர்வலத்தில் வந்தவர்கள் மேளம் அடித்து ஓலம் எழுப்பிக் கொண்டிருந்தனர்.

## கண்டதும் கேட்டதும்

கிரிக்கெட் போட்டிகளின் போது ரசிகர்களுக்கு உற்சாகம் எல்லை கடந்து விடுவதும் உண்டு.

கொழும்பிலும் சரி யாழ்ப்பாணத்திலும் சரி ஆட்டம் ஒருபக்கம் நடந்து கொண்டிருக்கும் ரசிகர்கள் மறுபுறம் கும்மாளம் அடித்துக் கொண்டிருப்பார்கள்.

கடந்த வார இறுதியில் யாழ்ப்பாணத்தில் ஒரு பெரும் கிரிக்கெட் போட்டி நடை பெற்றது.

ஆட்ட நேரத்தில் மைதானத்துக்குள் புகுந்த ஒரு ரசிகர் "பேல்ஸை "தூக்கிக்கொண்டு ஓடி விட்டார். "பேல்ஸை" திரும்பவும் ஒப்படைக்கும் படி ஒன்றுக்கு மேற்பட்ட தடவை ஒலிபெருக்கியில் அறிவிக்க வேண்டி இருந்தது ஆனால் அது திரும்பி வரவே இல்லை.

அத்துடன் விக்கெட்டுக்கு கற்பூரம் காட்டி தேங்காய் உடைத்த சம்பவங்களும் தாராளமாக இடம் பெற்றன.

போட்டியைக் கண்டு களிக்கச் சென்றவர்களில் சிலருக்கு இவை பெரு விருந்தாக அமைந்திருக்கலாம். ஆனால் பலருக்கு எரிச்சலூட்டின என்பது தான் உண்மை.

—செய்திலோலன்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சாபில் ஜனாதிபதி ஆட்சி; மேலும் ஓராண்டு நீடிக்கும்!

## இந்திய நாடாளு மன்றத்தில் சட்டம் கொண்டு வரமுடிவு

புதுடில்லி, மார்ச் 27

பஞ்சாப் மாநிலத்தில் ஜனாதிபதி ஆட்சியை மேலும் நீடிக்க இந்திய அரசு தீர்மானித்துள்ளது.

அமைச்சரவை நேற்றுக்கூடி இது சம்பந்தான முடிவை எடுத்தது.

அதற்கு முன்னர் புதுடில்லியில் நடந்த அனைத்து அரசியல் கட்சிகள் மாநாட்டில் இது சம்பந்தமாக கருத்து உடன்பாடு காணப்பட்டது.

இந்திரா காங்கிரஸ் கட்சியும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டது.

தற்போது பஞ்சாபில்அமுல் நடத்தப்படும் ஜனதிபதி ஆட்சி எதிர்வரும் மேமாதத்துடன் முடிவடைகிறது.

அதன் பின்னரும் ஜனாதிபதி ஆட்சி நீடிக்கப்பட வேண்டுமானால் அரசியல் சட்டம் திருத்தப்படவேண்டும்.

இதைத் திருத்துவதற்கான சட்டத்தை அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில் சமர்பிக்க இந்திய அரசு முடிவு செய்திருக்கிறது.

சட்டசபைத் தேர்தல் நடத்தக் கூடிய சூழ்நிலை பஞ்சாபில் நிலவவில்லை.

சட்டம், ஒழுங்கைப் பராமரிக்கும் சகஜநிலைமை தோன்றிய பின்னரே தேர்தல் நடத்தப்படவேண்டும். என்று அனைத்துக்கட்சிகளும் கருத்துத் தெரிவித்தன.

இதனிடையில் நேற்று மட்டும் பஞ்சாபில் 20 க்கு அதிகமானோர் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டனர். (எ)

## பீகிங் படமாளிகைகளில் காதலருக்கு விசேட ஆசனம்!

### 'வேவு' பார்க்கும் கண்களில் இருந்து காப்பாற்ற

பீகிங் மார்ச் 27

படம் பார்க்கும் காதலர்களின் தனிமையைப் பாதுகாக்க பீகிங் நகர தியேட்டர்களில் விசேட ஆசன வசதிகளை அதிகாரிகள் செய்து கொடுத்துள்ளனர்.

மூன்றாம் நபர்களின் 'வேவு' பார்க்கும் கண்களில் இருந்து காதலர்கள் ஒதுங்கியிருந்து படம் பார்க்கக் கூடியதான இரட்டை ஆசனங்கள் பீகிங்கில் உள்ள 17 தியேட்டர்களில் பொருத்தப்பட்டுள்ளன.

தியேட்டர்களின் வருமானம் அதிகரிப்பதற்கு காதலர்களும் ஒரு காரணமாகும் என்று கப்பிடல் சினிமா இயக்குநர் லியூஹொங்பெங் சொன்னார்.

## பஸ் தீப்பிடித்து 70பயணிகள் பலி!

கல்கத்தா, மார்ச் 27

பஸ் ஒன்று தீப்பற்றி எரிந்ததில் 70 பயணிகள் கொல்லப்பட்டனர்.

கல்கத்தாவில் இருந்து புவனேஸ்வர் நோக்கிச் சென்று கொண்டிருந்த பஸ் மரத்துடன் மோதி பின்னர் மின்சாரக்கம்பிகளில் சிக்கிக்கொண்டு பள்ளத்தில் விழுந்தது.

அதைத்தொடர்ந்து பஸ் தீப்பற்றியது. அப்போதே இவர்கள் உயிரிழந்தனர்.

## 21 ஆம் நூற்றாண்டின் அதிவேக பயணிகள் விமானம்!

மாஸ்கோ, மார்ச் 27

21 ஆம் நூற்றாண்டின் அதிவேக பயணிகள் விமானத்தைத்தயாரிக்கும் பணியில் சோவியத் விமானம் கட்டும் நிபுணர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இப்புதிய ரகசூப்பர்ஸோனிக் விமானத்தில் 250 பயணிகள் செல்லலாம். மணித்தியாலத்துக்கு ஆயிரத்து 100 கிலோ மீற்றர் வேகத்தில் இவ்விமானம் பறக்கும்.

இப்புதிய ரக விமானம் தனது கன்னிப்பயணத்தை 2005 ஆவது ஆண்டில் மேற்கொள்ளும். (எ

## இஸ்லாம் எமது வாழ்க்கை; பெனாஸிர் பூட்டோ உரை!

ராவல்பிண்டி மார்ச் 27

இஸ்லாம் மதத்தின் வளர்ச்சிக்காக எனது அரசு பாலம் என்றும் பாகிஸ்தான் பிரதமர் பெனாசிர் பூட்டோ சொன்னார்.

ராவல்பிண்டியில் நடந்த நாட்டின் உலமா மற்றும் மார்க்க அறிஞர்களின் மாநாட்டில் பிரதமர் பேசினார்.

அப்போது அவர் சொன்னதாவது;

'இஸ்லாம் எங்கள் வாழ்க்கை இஸ்லாம் எமது ஆணிவேர் எமது வாழ்வு இஸ்லாம் காட்டும் வழியில் இடம் பெற வேண்டும் - என்று அவர் சொன்னார். (எ)

## குண்டுவெடிப்பில் 8 பேர் காயம்!

லண்டன், மார்ச் 27

வட அயர்லாந்தில் பொலீஸ் நிலையம் ஒன்றின் முன் கார் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் 8 பேர் காயமடைந்தனர்.

இவர்களில் இருவர் சிப்பாய்கள் இருவர் பொலீஸார் எஞ்சியோர் பொதுமக்கள் ஆவர்.

நூறு வீடுகளுக்கு மேல் சேதமடைந்தது.

ஆயிரம் கிலோகிறாம் எடையான இக்குண்டைவைத்தவர்கள் ஐரிஷ் தீவிரவாதிகள் என்று தெரியவருகிறது,

கடந்த 2 மணி நேரத்தில் பொலீஸ் நிலையங்கள் மீது ஐரிஷ் தீவிரவாதிகள் நடத்திய இரண்டாவது தாக்குதல் இதுவாகும்.

## உஸ்பெக் மொழியில் திருக்குர்ஆன்

மாஸ்கோ, மார்ச் 24

உஸ்பெக் கிஸ்தான் 2லட்சம் திருக்குர்ஆன் பிரதிகள் அடுத்த வருடம் அச்சிட்டு வெளியிடப்படவுள்ளது.

உஸ்பெக் கிஸ்தான் விஞ்ஞானப் பேரவை இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

பேராசிரியர் இஸ்மதுல்லாஹ அப்துல்லாயேல் என்ற உஸ்பெக் குடியரசு பேராசிரியர் புனித குர்ஆனை அரபு மொழியிருந்து உஸ்பெக் மொழிக்கு மொழிபெயர்த்து வருகிறார்.


63 வயதான பேராசிரியர் அப்துல்லா ஹ200 விஞ்ஞான ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார். மத்திய ஆசியாவிலும் கொஉறர்களிலும் அரபுக் கவிதைகள் மற்றும் 10 ஆம், 11 ஆம் நூற்றண்டின் அராபியாக் கவிஞர்களின் தொகுப்பு ஆகியவற்றையும் அவர் எழுதியுள்ளார்.

தாஉவுகண்டில் உள்ள இமாம் புஹாரி மத்றஸா மொழிபெயர்ப்பில் பேராசிரியருக்கு உதவும்.

சரித்திர, புவியியல், இலக்கிய விளக்கங்களுடன் புனித குர்ஆன் வெளிவரும்.

புலமைப் பரிசில் பரீட்சைக்கான
ஆண்டு 5
★ கணிதம், தமிழ் வகுப்புகள்
ஆரம்பம்: 07 - 04 - 1990
பெயர்களை பதிவு செய்க.
RADIANT INSTITUTE
Punkan Kulam, Ariyalai.
[2977]

வெளிவந்துவிட்டது!
பிரதிக்கு முந்துங்கள்!!



பங்குனித் திங்கள் இதழ்
அம்பாள் அடியார்களே!
உங்களுக்கோர் அருவிருந்து!!

ஞானக்கதிர்
அன்பு - அறநெறி - ஆன்மீகம்

இம் மாத கதிரிலே!....
★ அம்பாளின் தோற்றம்
★ அம்பாளை வழிபடும் முறைகள்
★ அம்பாளுக்குரிய விரத நாட்கள்
★ அம்பாளுக்குரிய நிவேதனப் பொருட்கள், புஷ்பங்கள், நிறங்கள், இரத்தினங்கள், இலைகள் பற்றிய விளக்கம்.

அம்பாளின் திருத்தலங்களான:
☐ இணுவில் சிவகாமியம்பாள் ஆலயம்
☐ சங்கரத்தை பத்திரகாளி அம்பாள் ஆலயம்
☐ பன்றித்தலைச்சி அம்மன் ஆலயம்
☐ திருக்கோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலயம்
— ஆகியவற்றின் வரலாறுகளும், அற்புதங்களும்.
★ பகவான் சாயிபாபாவின் தினசரிப் பிரார்த்தனை
★ காட்டுச் சாமியாரின் ஸ்பரிச தீட்சை
★ இன்னும் பல ......... !
விலை ரூபா 5/- மட்டுமே!
[சி-4086]

★ லிபியா
வேலை வாய்ப்பு
1. எலெக்றிசன்ஸ் US டொலர் 300
2. டக் பாபிறிக் கேற்றர்ஸ் (Duct Fabricators) US டொலர் 300
3. பைப் பிற்றேர்ஸ்/பிளம்பர்ஸ் (Pipe Fitters/Plumbers) டொலர் 300
இரண்டு வருட ஒப்பந்தம்
உணவு, இருப்பிடம், மருத்துவ சேவை இலவசம்
8 மணித்தியால வேலை
ஓவர் ரைம் வேலை தாராளமாக உண்டு.
★ முதல் எட்டு மாத காலம் கிறீசில் வேலை செய்ய வேண்டி வரும்.
கட்டாய ஓவர்ரைம் நாளொன்றிற்கு 5 மணித்தியாலம் செய்ய வேண்டும்.
பல அடுக்கு மாடிகள் கொண்ட புதிய வைத்திய சாலை கட்டிட நிர்மாண வேலையில் நீங்கள் வேலை செய்ய இருப்பதால் அனுபவமும், நுட்பமும், ஆற்றலும் உள்ளவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். வேலை திருப்திகரமாக இல்லாவிட்டால் திருப்பி அனுப்பப்படுவார்கள்.
★ ஒரு மாத காலத்திற்குள் பயணம்.
தகுதி உடையவர்கள்
பாஸ்போட், 5 படங்கள், சான்றிதழ்களுடன் கீழ் வரும் முகவரிக்கு நேரில் வரவும்
பாஸ் போட் தந்து முன்பு விண்ணப்பித்தவர்களும் உடன் வரவும்:
இந்திராணி ஏஜென்சி
181/4, முதலிகே மாவத்தை,
கொழும்பு - 01.
தொழில் அனுமதிப்பத்திர இல: 616
[2974]

5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
மா. மகாதேவன்
(இளைப்பாறிய அதிபர் யா/மகாஜனாக் கல்லூரி தெல்லிப்பளை, யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில்)
தோற்றம்: 16-01-1926
மறைவு: 23-03-1985
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
(2936)

இலங்கைப் பல்கலைக் கழகங்களின்
வெளிவாரிப் பட்டமாணிப் பரீட்சைகள்
கல்வியாண்டு 1990/91
பல்கலைக் கழகங்களில் அனுமதி கிடைக்காதவர்களின் தேவை கருதி வெளிவாரி பட்டப்படிப்புகளுக்கான பயிற்சி வகுப்புகள்
★ ஆரம்பம்: 31 – 03 – 1990 ★
க. பொ. த. உயர்தரப்பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், நிருவாக சேவை உத்தியோகத்தர்கள் பின்வரும் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.
கலைமாணி (B. A) விஞ்ஞானமாணி (B. Sc) வர்த்தகமாணி (B. Com)
(புள்ளி விபரவியல்)
விண்ணப்பங்கள் மார்ச் மாதம் 30ம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப் படிவங்களையும், விபரத்திரட்டினையும் அலுவலகத்தில் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.
★ பல்கலைக்கழக பதிவுகள் யாவும் நிறுவனத்தால் செய்து தரப்படும்.
பதிவாளர்:-
★ ASTAN Institute ★
166/1, Hospital Road, Jaffna.
(A. S. சங்கரப்பிள்ளை கட்டிடம் 1ஆம் மாடி)
[சி-3471]

புலமைப் பரிசில் பெறுகின்றனர்
த பெனின்சுலா குறுப் நிறுவனம் வழங்கும் ஓராண்டு கால புலமைப் பரிசில்களை பின் வருவோர் பெறுகின்றனர்.
S. சாமின் பிரியந்தி (6) G. கோகுலதீபன் (7) K. விஜயபாலா (8) K. ராகுலன் (9) T. சுதர்சன் (10) K. கோபாலன் (11) T. வாசுகி (12) K. விஜயபிரபா (13)
RADIANT INSTITUTE
Punkan Kulam, Ariyalai.
[2978]

தமிழினத்தின் விடுதலைக்கு
விடிவெள்ளியாகத் தோன்றி மக்களின்
உள்ளத்தில் ஒளிவிட்டு வழிகாட்டும்
அன்னை அன்னபூபதிக்கு
எமது அஞ்சலிகள்
செல்வன்ஸ் டீசல் எஞ்சினியேர்ஸ்
கோப்பாய் சந்தி, கோப்பாய்.
[12229]

இத்தாலி (Italy)
இத்தாலியில் இந்தவருடம் (1990) உலக கிண்ணத்திற்காக உதைபந்தாட்டப் போட்டி நடைபெற இருப்பது யாவரும் அறிந்ததே இதை நீங்களும் நேரிலே (இத்தாலியில்) கண்டு களிக்க விரும்பினால் எம்மைச் சந்தித்து முழு விபரங்களையும் அறிந்து கொள்ளலாம்.
சந்திக்கும் நேரம்:
பி பகல் 01 மணிமுதல் 5 மணிவரை
20 – 04 - 90 ற்கு முன்பாக உங்களைப் பதிவு செய்து கொள்ளுங்கள்.
ARAVIEENTHARAJA
19, Station Road,
Hendala,
Wattala,
Colombo.
யாழ் பிரதிநிதி
பிரகாஷ்
168, கோவில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
[12226]

உங்கள் தேவை!
எங்கள் சேவை!!
★ தரமான
★ தெளிவான
★ சிக்கனமான
தமிழ், ஆங்கில தட்டச்சு, றோணியோ வேலைகளுக்கு
★
"ஷப்றா" (சேவைப் பகுதி)
இல. 19, 2ஆம் ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

அந்தியேட்டியும், நன்றிநவிலலும்



பிறப்பு:
13 - 12 - 1892
★●★
இறப்பு:
01 - 03 - 1990
திருமதி
நாகம்மா கிருஷ்ணபிள்ளை
எமது குடும்பத்தலைவி திருமதி நாகம்மா கிருஷ்ணபிள்ளை அவர்களின் ஈமக்கிரியைகளில் பங்கு பற்றியவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் எமது துக்கத்தில் கலந்துகொண்டவர்களுக்கும் எங்கள் நன்றியைத்தெரிவித்துக்கொள்கின்றோம்.
மேலும் 31 - 03 – 1990 சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண வைபவத்தில் கலந்து அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
கணேஸ்வரம்,
அளவெட்டி.
(12215)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிசளிப்பு விழா

கலாலயாவில் 88ம், 89ம் ஆண்டுகளில் டிப்ளோமா மனைப் பொருளியல் பயிற்சி நெறி பயின்ற மாணவிகளுக்கான பரிசளிப்பு வைபவம் எதிர்வரும் 01 - 04 - 90 ஞாயிற்றுக்கிழமை 2.00 மணிக்கு மேற்படி நிறுவனம் அமைந்துள்ள யாழ். விக்டோரியா வீதியில் நடைபெற உள்ளது. சான்றிதழ் பெறவிருக்கும் மாணவிகள் தவறாது சமூகமளிக்கவும்.

நிர்வாகி

[சி-4159]



## விக்னா டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்

# 90 DAY CLASSES

(8.00 — 1.00)

பிரிவு 1 ஆரம்பமாகிவிட்டது

பிரிவு 2 ஆரம்பம்: 2 - 4 - 90 காலை 8.00

நேர அட்டவணை;

8.00 – 9.00 வர்த்தகம் / இ. நாகரிகம்
9.00 – 10.30 பொருளியல்
10.30 – 12.00 கணக்கியல் / தமிழ்
12.00 – 1.00 அளவையியல் / அரசியல்

மு. குறிப்பு:
I தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்கள் ஒருங்கிணைந்து போதிக்கும் ஒரே நிறுவனம்.
II வினா, விடை வகுப்புகள் இலவசமாக நடாத்தப்படும்.
III விடுதி வசதி செய்து கொடுக்கப்படும்.

[சி-4162]



## EXTERNAL PHARMACIST EXAMINATION

Ceylon Medical College Council Colombo

இலங்கை மருத்துவக் கல்லூரி சபை கொழும்பு நடத்தும்

வெளிவாரி பாமசிஸ்ற் பரீட்சை

மேற்படி பரீட்சைக்குரிய பயிற்சி நெறி வகுப்புகள் ஆங்கிலம் உட்பட

01- 04- 90 ல் ஆரம்பமாகின்றன.

தகைமைகள், க. பொ. த (சாதாரணம்) ஆங்கிலத்தில் சித்தி விஞ்ஞான பாடம் ஒன்றில் திறமைச் சித்தி

இடம்:- ஞானகுழந்தை இல்லம் (ஸ்ரீதர் தியேட்டருக்கு அருகே)

நேரம்:- காலை 8. 30 — 12. 30 வரை

பயிற்சிக் காலம்:- ஒரு வருடம்

விண்ணப்பித்தோரும் வரவிரும்புவோரும் நேரில் வரவும் மேலதிக விபரங்கட்கு:

NORTHERN PHARMACY,
HOSPITAL ROAD, JAFFNA.

(2985)


## 21ஆம் நாள் நினைவஞ்சலி



செல்வி வாசுகி மணிவாசகன்

தோற்றம்: 7-11-1981 மறைவு: 8-3-1990

அருமைக் கண்மணியே!

இந்து மகளிர் கல்லூரி ஆரம்பப் பாடசாலையில் பயின்று அங்குள்ள ஆசிரியைகளுக்கும் எனக்கும் அருமை மகளாய் ஒளிர்ந்த மாணிக்கமே எங்களைத் தவிக்கவிட்டுப் போயினையோ! இனி உன்னைக் காண்பதெப்பொழுதோ?

அருமைத் தாயார் விமலா மணிவாசகன்,
பாட்டன் பாட்டிமார், கந்தையா மாணிக்கவாசகர்,
தங்கரத்தினம் கந்தையா, அன்னபூரணி வயித்திலிங்கம்.

(2883)

காணிப் பதிவக வேலைகள் தாமதம்:

# புனரமைப்புக் கடன் பெறமுடியாத நிலை!

யாழ்ப்பாணம், மார்ச், 28

'வீடுகளைப் புனரமைக்கக் கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் கடன் பெற விண்ணப்பித்த 117 பேரில் ஆறு பேருக்கு மட்டுமே கடன் வழங்கப்பட்டது. காணிப் பதிவக வேலைகள் தாமதமாவதால் பணம் இருந்தும் கடன் வழங்க முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது.'

— இப்படிக் கூறினார் மக்கள் வங்கி அதிகாரி.

யாழ். மாவட்டத்தில் சேதமடைந்த வீடுகளைப் புனரமைக்க ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா வரையிலும் –, தொழில் நிலையங்களைப் புனரமைக்க இரண்டு லட்சம் வரையிலும் கடன் வழங்க உலக வங்கி மூலம் 16 கோடி ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிவாரணத்தை யாழ்ப்பாணத்தில் வழங்குவதில் தாமதம் நிலவுகிறது. இது குறித்து மக்கள் வங்கி அதிகாரி ஒருவரிடம் விசாரித்த போது அவர் கூறியதாவது:- வீடுபுனரமைக்க 117 பேர் விண்ணப்பித்தனர். 6 பேருக்கே கடன் வழங்கியுள்ளோம். தொழில் நிலையப்பாதிப்புக்கு நிவாரணம் கோரி சமர்ப்பிக்கப்பட்ட 26 விண்ணப்பங்களில் ஒன்றுக்குக் கூட இன்னும் கடன் வழங்கப்படவில்லை.

காணிப்பதிவக வேலைகள் தாமதமாவதால் மக்கள் தமது காணி உறுதிகளைப் பெற்றுக் கொள்வதில் கஷ்டமடைகின்றனர். உறுதிகள் கிடைக்காததால் வங்கிக் கடன்களையும் அவர்கள் பெறமுடியாதுள்ளது.' — என்று அவர் கூறினார்.

இலங்கை வங்கி அதிகாரி ஒருவர் இது பற்றிக் கூறியதாவது:-

எமக்குக் கிடைத்த விண்ணப்பங்களில் 130 பேருக்குக் கடன் வழங்கியுள்ளோம். தொழில் ஸ்தாபனக் கடன் ஆறுபேருக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி கடன்களை வழங்கக் காணி உறுதிக்குப் பதிலாக நிலையான வைப்புக்களையும் நாம் பிணையாக ஏற்றுக் கொள்கிறோம். அதனால் கூடிய எண்ணிக்கையான விண்ணப்பங்களுக்கு நாம் கடன் வழங்க முடிந்தது.

இத்தகைய கடன்களுக்கு ஆறு வீத வட்டியே அறவிடப்படுகிறது. அவற்றுக்குப் பிணையாக வைக்கப்படும் நிலையான முதலீடுகளுக்குப் 15 வீதம் வரை வட்டி வழங்குகிறோம்.

இதனால் பொதுமக்கள் காணிப் பதிவகங்களுக்கு அலைந்து காணி உறுதிகளைப் பெறுவதற்குப் பதிலாக — நிலையான வைப்புக்களைக் காட்டி அவற்றுக்கு எதிராகக் கடன் பெறும் முறையை நாடுகிறார்கள் — என்றார்.

(உ - 3)

## விசேஷ கருமபீடம் மேலும் 2 நாட்களுக்கு இயங்கும்

யாழ்ப்பாணம், மார்ச் 28

'இலங்கைவங்கி ஆஸ்பத்திரி வீதிக்கிளையில் இயங்கும் நிவாரணக் கொடுப்பனவுக்கான விசேஷ கருமபீடம் மேலும் இருநாட்கள் இயங்கும். நிவாரணம் பெறத் தவறியோர் அந்த இருநாட்களிலும் நிவாரணத்தைப் பெற முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது,

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ளவர்களுக்கு நிவாரணம் வழங்க அமைக்கப்பட்ட இந்தக் கருமபீடத்தில் செயலக ஊழியர்களே கடமை புரிந்தனர்.

இந்தப் பீடம் இன்றுடன் வேலைகளைப் பூர்த்தி செய்த போதும் கடந்த இருவாரங்களில் நிவாரணம் பெறாதவர்களுக்குச் சந்தர்ப்பம் அளிக்கும் வகையில் மேலும் இரு நாட்களுக்கு இயங்க இருக்கிறது.

முதல் வாரத்தில் பெறாதவர்கள் வியாழக்கிழமையும் இரண்டாம் வாரத்தில் பெறாவர்கள் வெள்ளிக்கிழமையும் நிவாரணம் பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஏற்பினால் பலி!

நாய் கடித்து ஒரு மாதத்தின் பின் ஏற்பு ஏற்பட்ட நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட ஒருபெண்மணி நேற்று அங்கு மரணமானார்.

மரணமானவர் கிளிநொச்சியைச் சேர்ந்த முத்தையா வள்ளியம்மை (வயது 56)

# மக்களோடு ஒன்றிய இயக்கம் தோற்றதாக வரலாறு இல்லை

## மாவிட்டபுரம் உண்ணா நோன்பு முடிவில் உரை

தெல்லிப்பழை மார்ச் 28

மக்களோடு ஒன்றிப்போன எந்த இயக்கமும் தோற்றதாக வரலாறு இல்லை. அமெரிக்கா 85 ஆயிரம் துருப்புக்களை வியட்நாமுக்கு அனுப்பி அங்கு தோற்றுப்போன வரலாறு நாம் அறியாததல்ல. விடுதலைப் புலிகள் மக்களுடன் ஒன்றி விட்டார்கள். மக்களுக்காக போராடுகிறார்கள். ஆகவே இந்த போராட்டம் வெற்றி பெறும். இதற்குச் சில காலம் செல்லலாம். அதுவரை பொறுமையாக இருப்போம். எம்மால் முடிந்த பங்களிப்பை ஆற்றுவோம்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் தெற்கு வீதியில் நேற்று செவ்வாய்க் கிழமை இடம் பெற்ற அன்னை பூபதியின் நினைவு நாளை ஒட்டிய ஒரு நாள் அடையாள உண்ணாவிரதத்தில் பேசிய காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி முன்னாள் உப அதிபர் பிரமஸ்ரீ. து. சுந்தரமூர்த்தி குருக்கள் மேற்கண்டவாறு கூறினார்.

நேற்றுக் காலை 7 மணிக்கு ஆரம்பமான இந்த உண்ணாவிரதத்தில் பாடசாலை மாணவர்கள், ஆண்கள் - பெண்கள் பெரும் எண்ணிக்கையில் கலந்து கொண்டனர்.

அன்னை பூபதியின் பெரிய அளவிலான படம் வைக்கப்பட்டு பூக்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

பிற்பகல் 3 மணி அளவில் உண்ணாவிரதம் முடித்து வைக்கப் பட்டது.

அதில் கலந்து உரையாற்றிய பிரமஸ்ரீ. து. சுந்தரமூர்த்திக் குருக்கள் மேலும் கூறியதாவது:-

இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்டபோது அது தமிழ் மக்களைப் பாதுகாப்பதற்காக உருவானதாக கூறப்பட்டது. ஆனால் அந்த ஒப்பந்தம் வந்த பின் எமது மக்கள் சொல்லொணா துயரங்களை அனுபவிக்க நேர்ந்தது. தியாக தீபங்களான அன்னை பூபதி, திலீபன் போன்றோர் அகிம்சாவழியில் தமது உயிர்களை இழக்கவும் நேரிட்டது.

புலிகளை அழிப்பதாகக் கூறி இந்திய அமைதிப்படை செய்த அட்டூழியங்கள் எம் மக்களை நிலைகுலையச் செய்தன.

ஆனால் அவர்கள் நினைத்தபடி எதுவும் கைகூடவில்லை அதற்குக் காரணம் மக்களும், புலிகளும் ஒன்று என்பதை அவர்களால் உணரமுடியவில்லை. பின்பு 2½ வருடங்களின் பின்தான் அதனை அவர்கள் உணர்ந்தனர்.

இன்று எமது பிரச்சினை குறித்து ஏற்பட்டுள்ள புதிய அணுகுமுறை வெற்றிகரமாக நிறைவேறும் என்றே நம்புகிறோம். ஜனாதிபதி பிரேமதாசா நல்லெண்ண முறையில் எமது பிரச்சினைகளை அணுகி அதற்கு தீர்வு கண்டால்தான் எமது நாடு அமைதியைக் காணமுடியும். இல்லாவிடில் தமிழ் மக்களது போராட்டம் மேலும் முனைப்புப்பெற நேரிடும். இப்படிக் கூறினார்.

(இ-168)

## தீர்வு கிடைக்கும்......

(ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேசுகையில் தெரிவித்தார்.

அங்கு அவர் ஆற்றிய உரையின் முக்கிய அம்சங்கள் வருமாறு;-

★ நாடாளுமன்றக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக மாதத்தில் எட்டுநாட்கள் மட்டுமே எம். பிக்கள் கொழும்பில் தங்கியிருக்க வேண்டும். ஏனைய நாட்களை எம். பிக்கள் தங்கள் தொகுதிகளில் செலவிடவேண்டும்

★ கடந்த ஆண்டில்பெற்ற அனுபவங்களைக்கொண்டு அமைச்சர்களின் பணிகளில் சில மாற்றங்களைச் செய்ய நான் உத்தேசித்துள்ளேன்.

மக்களின் தேவைகளைக் கருத்திற்கொண்டு நான் இம் மாற்றங்களைச் செய்யஉள்ளேன்.

உதைபந்தாட்டப் போட்டிக்கான அணி ஒன்றைத் தெரிவுசெய்வதைப் போன்றே இதுவும் இருக்கும்.

ஓர் அணியின் திறமையான தலைவர் திறமை, பொறுப்பு ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டே அணியைத் தெரிவு செய்கின்றான்.

எனினும் ஒருவீரர் புகழ் பெற்றவராக இருந்தாலும் தேவையான வேளையில் அவரது ஆட்டம் திருப்தியளிக்காவிட்டால், போட்டியில் வெற்றியடைய வேண்டும் என்று உறுதி பூண்டுள்ள ஒரு தலைவன் அவரைத் தமது அணியில் சேர்த்துக்கொள்ள மாட்டான்.

இதன் அடிப்படையிலேயே இனிமேல் ஏற்படும் சவாலை எதிர்நோக்குவதற்கு அமைச்சரவையை நான் மாற்றி அமைக்கப்போகிறேன்.

பாதுகாப்பு நிலைமையில் கணிசமான அளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது, எனினும் அதனைக் குழப்ப சூழ்ச்சிகள் செய்யப்படக் கூடும். அவ்வாறான சூழ்ச்சிகளை முன்கூட்டியே கண்டுகொள்ள எம். பிக்கள் மக்களுடன் தொடர்ச்சியான தொடர்பு வைத்திருக்கவேண்டும்.

### பாதுகாப்பு குறையும்

★ அமைச்சர்கள் துணை அமைச்சர்களின் பாதுகாப்பைக் குறைக்கவேண்டி உள்ளது 10, 15 வாகனங்கள் ஒவ்வொருவரின் பாதுகாப்புக்காகவும் பாவிக்கப்படுகின்றன. ஒருசில மாதங்களுக்கு முன்னர் அவை தேவைப்பட்டிருக்கலாம். ஆனால் இனித் தேவையில்லை. அமைச்சர்களுக்கு ஒரு வாகனமும், மேலதிக வாகனம் ஒன்றும், பாதுகாப்பு வாகனம் ஒன்றுமே இனி அனுமதிக்கப்படும்.

★ மக்களுக்குச் சேவை செய்ய வந்தவர்கள் சில வேளைகளில் ஆபத்துக்களை எதிர்நோக்கவும் தயாராக இருக்கவேண்டும். ஆபத்துக்களின் மத்தியில் மக்களுக்குச் சேவை செய்யவும் தயாராக இருக்கவேண்டும். அவ்வாறு முடியாதஎம். பிக்கள் அமைச்சர் பதவிகளைப்பொறுப்பேற்கக்கூடாது.

★ வாழ்க்கைச் செலவு அதிகரித்துவருகிறது. நாட்டில் நடந்த வன்செயல்களே அதற்குப் பிரதான காரணம். வாழ்க்கைச் செலவைக் குறைத்து மக்களுக்கு உதவும் விதத்தில் எமது எதிர்கால நடவடிக்கைகள், திட்டங்கள் அமையவேண்டும் - என்றார்.

(அ-எ)

## 9 ஆயிரம் தமிழ் . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

படமாட்டா. ஏனென்றால் எந்தவொரு விரும்பத்தகாத நடவடிக்கையும் இந்த நாட்டில் மீண்டும் இடம்பெறுவதை இலங்கை விரும்பவில்லை. எதிர்காலத்தை இனிமேலும் நாம் விரயமாக்கப்போவதில்லை.

வடக்கு - கிழக்கு மாகாண முதலமைச்சரும் அவரது கட்சி உறுப்பினர்களும் நாட்டை விட்டு வெளியேறிவிட்டனர்.

அதனால் வடக்கு-கிழக்கு மாகாணசபையை அரசே நிர்வகிக்கும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் ஆயுதங்களைக் கைவிடுவது பற்றிய கேள்வி இப்போது எழுந்துள்ளது. இதற்குத் தீர்வு காண ஒரு வழி, தீவிரவாதிகளை பொலீஸிலும் இராணுவத்திலும் சேர்த்துக்கொள்வதாகும்.

### புனரமைப்புக்கு 50 லட்சம் டாலர்

வடக்கு-கிழக்குப் பிரதேசத்தில் கடற்றொழில் மற்றும் விவசாயத் துறைகளை முன்னேற்ற பலவற்றைச் செய்ய முடியும். சேதமடைந்த சகல தொழிற்சாலைகளையும் பழுது பார்த்து, உற்பத்தி நடவடிக்கைகளை வழமையான மட்டத்துக்குக் கொண்டு வரமுடியும்.

இதற்கென்று ஐம்பது லட்சம் டாலர் பணம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### மாவட்டம் தோறும் இராணுவப் பிரிவு

பொலீஸிலும் இராணுவத்திலும் தலா எண்ணாயிரம் முதல் ஒன்பதாயிரம் பேர் வரை சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் இராணுவப் படைப்பிரிவு ஒன்று இருத்தல் வேண்டும்

ஒரு படைப்பிரிவில் ஆயிரம் வீரர்கள் இருப்பர். இதன்படி 25 மாவட்டங்களுக்கும் தலா 25 ஆயிரம் இராணுவ வீரர்கள் தேவைப்படுவார்கள்.

கடற்படை, விமானப்படை ஆகியன விசேட சேவைகள். இவற்றில் பெருந்தொகையானோர் இடம்பெற்றிருக்க மாட்டார்கள்.

இராணுவத்தை பொறுத்தமட்டில் கடந்த இரண்டாண்டு காலத்தில் பெறப்பட்ட பயிற்சியும் கொள்வனவு செய்யப்பட்ட ஆயுதங்களும் போதுமானவையாகும்.

வடக்கு கிழக்கு மாகாணத்திலும், குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் மக்களும் சிங்கள மக்களும் வசிக்கிறார்கள். அதனால் வடக்கு-கிழக்கு நிரந்தர இணைப்புப் பற்றி பொதுவான அபிப்பிராயம் ஒன்றைப் பெற்றுக் கொள்ளும் வகையில் கலந்தாலோசிக்கப்படும்.

இலங்கையர் என்றவகையில் எந்தவொரு கட்சி அங்கத்தவருக்கும் பாதுகாப்பளிக்க வேண்டிய கடப்பாடு அரசுக்கு உரியது -இவ்வாறு திரு ரஞ்சன் விஜேரத்தின தெரிவித்தார். (அ-எ)

## பரீட்சைக்கு———

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கும் இளைஞர்கள் ஜீ. சீ. ஈ. பரீட்சைக்குத் தோற்றுவதற்கு வசதியாகவே பெற்றோரிடம் ஒப்படைக்கப்படுவதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-)

## குடாநாட்டில்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

திகதி வரை பணம் செலுத்தியவர்களுக்கு 31 ஆம் திகதி நகைகள் மீளளிக்கப்படும்.

நகைகள் மீளளிப்பு வேலைகள் அந்தந்தத் தினங்களில் காலை 8.30 மணி தொடக்கம் நண்பகல் ஒருமணிவரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது தொகுதி நகைகள் ஏப்ரல் மூன்றாம் திகதி முதல் மீளளிக்கப்படும் என வங்கி அறிவித்துள்ளது.

(உ-3)

## மாவட்ட ...

(1ஆம்பக்கத் தொடர்ச்சி)

ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் பலர் இது சம்பந்தமான கோவைகளை உரியவர்களிடம் கையளிக்காமல் சென்றிருப்பதாலும்—

வங்கி கணக்குகளில் சில கணக்குகள் சரிபார்க்கப்பட்டு உறுதிப்படுத்தப்படாததாலும் –

கணக்குகளை முடிப்பதில் பெரும் சிக்கல்கள் எதிர்நோக்க வேண்டியுள்ளதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

[உ-3]


## நீங்களும் பட்டதாரியாகலாம்

A/l 3 பாடங்களில் சித்தியடைந்தவர்களும்; பயிலுநர், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் பட்டதாரியாவதற்கு அரிய வாய்ப்புண்டு.

பேராதனை பல்கலைக் கழகத்தில் (வெளிவாரியாகப்) பதிவு செய்து கொள்ளலாம்.

பதிவுகளை எமது நிறுவனத்தில் 10 – 04 – 90 வரை செய்து கொள்ளலாம். இதற்கு முன்னரே விண்ணப்ப படிவங்களையும் விபரங்களையும் பெற்றுக் கொள்ளவும்.

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

[சி-4175]



## விக்னா டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

# O/L DAY CLASSES

(Dec)

(8.30 — 1.30)

ஆரம்பம்: 06-04-90

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு:

| | |
|---|---|
| கணிதம்: | — திரு. செல்வா |
| ஆங்கிலம்: | — திரு. விஸ்வநாதன் |
| விஞ்ஞானம்: | — திரு. J. R. ஸ்ரீ |
| சமூகக்கல்வி / வர்த்தகம் | திரு. கருணாகரன் / திரு. சோமி |
| தமிழ் / சமயம் | திரு. சுந்தரலிங்கம் |

மு. குறிப்பு:
1. பயிற்சிப் பரீட்சைகள் ஒவ்வொரு வருடமும் இலவசமாக நடாத்தப்படும்.
2. கடமை, கட்டுப்பாட்டுடன் நடாத்தப்படும் ஒரே நிறுவனம்.
3. மாணவர்கள் முன் கூட்டியே பெயர்களை பதிவு செய்யவும்.
4. விடுதி வசதி செய்து கொடுக்கப்படும்.

[சி-4166]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் அழைக்கின்றது

**ஆர்த்தி ஜுவல்லர்ஸ்**

- வர்ண நிழற்பட பிரதி ஒன்று 5/90
- Processing செய்தல் இலவசம்,
- விற்பனை-வர்ண நிழற்பட சுருள்கள்,
- பட அல்பங்கள், பெற்றறிகள்

பெற்றுக் கொள்ள நாடுங்கள்:



# உதயன்

28 - 03 - 1990 புதன்கிழமை



மெமிடம் வர்ண நிழற்படப்பிரதிகள் பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
வர்ண நிழற்படச சுருள்கள
போட்டோ அல்பங்கள் இலவசம
மேலதிக விபரங்களுக்கு

**ஆர்த்தி ஜுவல்லர்ஸ்**
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


## புலமைப் பரீட்சை அடிப்படையிலேயே ஆறாம் ஆண்டுக்கு மாணவர் அனுமதி!

### கல்வி அமைச்சின் செயலாளர் பணிப்புரை

யாழ்ப்பாணம் மார்ச் 28 ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் மட்டுமே பிரபல பாடசாலைகளில் ஆறாம் ஆண்டுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு கல்வி கலாசார, தகவல்துறை அமைச்சின் செயலாளர் கேர்ணல் வீ. எஸ். குடலிகம பணிப்புரை விடுத்திருக்கிறார்.

புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் பிரபல பாடசாலைகளில் ஆறாம் ஆண்டுக்கு மாணவர்களை அனுமதித்த பின்னரும், வெற்றிடங்கள் இருந்தால் அந்த வெற்றிடங்கள் மாகாணக் கல்விப் பணிப்பாளர் அங்கீகரித்துள்ள திட்டம் ஒன்றின் அடிப்படையில் நிரப்பப்படலாம் என்றும் சேர்ணல் குடலிகம தமது பணிப்புரையில் தெரிவித்திருக்கிறார்.

புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகளின்படி மாணவர்களை ஆறாம் ஆண்டுக்குச் சேர்த்துக் கொள்வதற்கு முன்னர் -

ஏதேனும் பிரவேசப் பரீட்சையை நடத்த ஏற்பாடு செய்திருந்தால் அவற்றை உடனடியாக இடை நிறுத்தி வைக்கும்படியும் அவர் பணிப்புரை விடுத்திருக்கிறார்.

இப்பணிப்புரை வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சுச் செயளாருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவ் உத்தரவை மீறும் கல்வித் திணைக்கள அதிகாரிகள் பாடசாலை அதிபர்கள் மீது உடன் கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் சேர்ணல் குடலிகம தமது பணிப்புரையில் தெரிவித்திருக்கிறார்.

இப்பணிப்புரையின் பிரதிகள், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் கல்லூரி ஆகியவற்றின் அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஆறாம் ஆண்டிற்கான பிரவேசப் பரீட்சை பற்றி இரு கல்லூரிகளின் பெற்றோர்களும் கல்வி, கலாச்சார, தகவற்துறை அமைச்சுச் செயலாளருக்கு முறையீடு செய்ததாகத் தெரிய வருகிறது.

அதை அடுத்தே இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டிருக்கிறது. (உ)

## துப்புரவு வேலை துரிதம்

யாழ்ப்பாணம், மார்ச் 28 கடந்த பல வருடங்களாக கவனிப்பாரற்று குப்பை கூளம் நிறைந்திருந்த சுப்பிரமணியம் பூங்கா, துரையப்பா விளையாட்டரங்கு, தந்தை செல்வா நினைவாலயப் பகுதிகள் இப்பொழுது யாழ் மாநகரசபை ஊழியர்களினால் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன. (இ-7]

## பிலிப்பைன்ஸ் தூதரகத்தை மூடிவிட அரசு முடிவு!

பிலிப்பைன்ஸில் உள்ள இலங்கைத் தூதரகத்தை மூடிவிட கொழும்பு அரசு முடிவு செய்துள்ளது.

இதற்குப்பதில் ஈரானில் தூதரகம் ஒன்றை திறக்க அரசு தீர்மானித்துள்ளதாம். (உ-எ)

## காட்டில் வீசப்பட்ட கைக்குழந்தை மீட்பு!

### புதிய சின்னக்குளத்தில் சம்பவம்

காட்டினுள் வீசப்பட்டு அநாதரவாகக் கிடந்த கைக் குழந்தையொன்று கண்டு பிடிக்கப்பட்டு, புலிகளினால் குழந்தையின் தாயிடம் ஒப்படைக்கப்பட்டது.

இச்சம்பவம் வவுனியா புதிய சின்னக் குளம் என்னுமிடத்தில் நடைபெற்றுள்ளது.

திருமணமாகி கணவன் வெளிநாட்டில் இருக்கும் வேளையில் இளம்பெண் ஒருவர் இக்குழந்தையைப் பெற்றெடுத்ததாகவும்—

பின்னர் காட்டுப்புறத்தில் அந்த இளம்பெண் குழந்தையை வீசிவிட்டதாகவும் கூறப்படுகிறது.

வேட்டைக்குச் சென்றவர்கள் குழந்தையைக் கண்டெடுத்து அப்பகுதியில் உள்ள புலிகள் பிரமுகர்களிடம் ஒப்படைத்தனர்.

விசாரணைகளை மேற்கொண்ட புலிகள் உரிய இளம் பெண்ணிடம் எச்சரிக்கை செய்து குழந்தையை ஒப்படைத்தனர். (உ-27)

## இளம் பட்டதாரி ஆசிரியர் மருதங்கேணியில் கொலை

தாளையடி, மார்ச் 28 வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் கடந்த ஞாயிறன்று மாலை இளம் பட்டதாரி ஆசிரியர் ஒருவர் மர்மமான முறையில் கொலையுண்டு கிடந்தார்.

கொழும்பு கொட்டாஞ்சேனை தமிழ் மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றும் கலைப்பட்டதாரியான முத்தையா சண்முகலிங்கம் (வயது 31) என்பவரே உயிரிழந்தவராவார்.

இவர் லீவில் தமது பெற்றோரைக் காண வீட்டுக்கு வந்ததாகவும், கடந்த ஞாயிறு மாலை கோவிலுக்கு வழிபாட்டுக்குச்சென்றபோது அவர்கொலையுண்டதாகவும் கூறப்படுகிறது.

அவரது சடலம் நேற்று முன்தினம் திங்கள் கிழமைஅதிகாலையில் மருதங்கேணி வடலியடி கோயிலுக்கு அண்மையில் தலையில் காயங்களுடன் கிடக்கக் காணப்பட்டது.

பிரேத பரிசோதனை சாவகச்சேரி அரசினர் ஆஸ்பத்திரியில் நடைபெற்றது. (உ-144)

## பூபதி நினைவாக நடந்த போட்டி

ஒட்டுசுட்டான் மார்ச் 28 அன்னை பூபதியின் நினைவாக முத்துஐயன்கட்டு வ.க அரசினர் த க பாடசாலையில் சென்ற செவ்வாய்க் கிழமை இல்ல விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

மலைமகள் இல்லம் முதலாம் இடத்தையும், அலைமகள் இல்லம் இரண்டாம் இடத்தையும், கலைமகள் இல்லம் மூன்றாம் இடத்தையும் பெற்றன.

கொத்தணி அதிபர் திரு. தா. சிவசம்பு பிரதம விருந்தினராக் கலந்து கொண்டார். (க-113)

## மறுமலர்ச்சி கழகம் சிரமதானம்

யாழ்ப்பாணம், மார்ச் 28 யாழ்ப்பாணபல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகம் அன்னை பூபதி நினைவாக நேற்றுக் காலை கைதடி வயோதிபர் இல்லத்தில் ஒரு நாள் சிரமதான வேலையை மேற்கொண்டனர்.

இதில் பல்கலைக்கழகமாணவர்களும் மற்றும் கைதடி பொது சங்கங்களின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இல்லத்தில்உள்ள வயோதிபர்களுக்கு ஒரு நாள் மதியபோசனத்தையும் மறுமலர்ச்சிக்கழகத்தினர் வழங்கினர். (இ- 6

## மத்திய கிழக்கு நாடுகளில்

## வேலை வாய்ப்புப் பெறுவோர் பெயர்களைப் பதிவதில்லை!

கொழும்பு மார்ச் 28 மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் வாய்ப்புப் பெற்றுச் செல்பவர்களில் 74 சத வீதத்தினர் இலங்கை வெளிநாட்டு வேலைப் பணியகத்தில் தங்கள் பெயர், விவரங்களைப் பதிவு செய்வதில்லை என்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

மத்திய கிழக்குச் சென்ற 5,384 பேரில் 1,381 பேர் மட்டுமே இப்பணியகத்தில் தங்கள் விவரங்களைப் பதிந்துள்ளனர் என்பது ஆய்வு ஒன்றில் இருந்து தெரிய வந்தது. (இ-எ,

## உள்ளூராட்சி தேர்தல்கள்

## வேட்பாளராக இளைஞர்களை நியமிக்க ஜனாதிபதி கோருகிறார்

கொழும்பு, மார்ச் 28 எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத்தேர்தல்களில் 40 சத வீதமான வேட்பாளர்களை இளைஞர்களாக நியமிக்கும்படி ஜனாதிபதி பிரேமதாஸா சகல அரசியல் கட்சிகளையும் கேட்டிருக்கிறார்.

அடுத்த மூன்று மாதங்களுள் பிரதேச சபைகள், நகர சபைகள் மற்றும் மாநகர சபைகளுக்கு தேர்தல்கள் நடத்தப்படவுள்ளன. (இ-எ]

## வைப்புச் சான்றிதழ் திட்டம் ஸ்ரான்லி கிளையிலும் அறிமுகம்

யாழ்ப்பாணம், மார்ச் 28 ஒரு லட்சத்துக்கு மேல் வைப்பிடக் கூடிய ''வைப்புச் சான்றிதழ்'' வழங்கும் வேலைகள் இலங்கைவங்கியின் ஸ்ரான்லி வீதிக் கிளையில் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் இந்த சான்றிதழ் ஆஸ்பத்திரி வீதிக் கிளையில் மட்டுமே வழங்கப்பட்டு வந்தது.

மக்கள் நலன் கருதி ஸ்ரான்லி வீதிக் கிளையிலும் இந்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பிராந்திய முகாமையாளர் திரு. க. கணேசமூர்த்தி தெரிவித்தார்.

## கியூபா தூதுவராக ராஜலிங்கம் நியமனம்

கொழும்பு மார்ச் 28 கென்யா, ஓமான், ஈரான், கியூபா ஆகிய நாடுகளுக்கு புதிய தூதர்களை நியமிக்க இலங்கை அரசு முடிவு செய்துள்ளது.

இவர்களில் ஒருவர் தமிழர். அவரது பெயர் திரு. என். கே. ராஜலிங்கம். இலங்கை வெளிநாட்டுச் சேவையில் பணிபுரிந்துவருகிறார்.

இவர் கியூபா நாட்டின் தூதராக நியமிக்கப்பட இருக்கிறார்.

இவரினதும் ஏனைய மூவரினதும் நியமனங்கள் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவினால் அங்கீகரிக்கப்பட வேண்டியுள்ளது. (உ-9)

## ஜீ. சீ. ஈ. (சாதாரண) தரப் பரீட்சை:

## முகவரி தெளிவின்மையால் அனுமதி அட்டைகள் தேக்கம்

யாழ்ப்பாணம் மார்ச் 28 எதிர்வரும் 30 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜீ. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் தனிப்பட்ட பரீட்சாத்திகளின் அனுமதி அட்டைகள் பல முகவரி தெளிவின்மையால் தபால் நிலையங்களில் விநியோகிக்க முடியாமல் தேங்கிக்கிடப்பதாகத் தெரிய வருகிறது.

சுன்னாகம் தபால் நிலையத்தில் மட்டும் சுமார் எண்பது அனுமதி அட்டைகள் இவ்வாறுதேங்கிக்கிடப்பதாக சுன்னாகம் தபால் நிலைய அதிபர் திரு. திருநாவுக்கரசு உதயனுக்குத் தெரிவித்தார்.

இதுவரை அனுமதி அட்டைகளை பெற்றுக்கொள்ளாத பரீட்சாத்திகள் உடனடியாக தமது பகுதி தபால் நிலையங்களுக்குச் சென்று அவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டிருக்கிறது. (உ-5)

## ஜீ.சீ.ஈ [சாதாரணதர பரீட்சை]

## வினாத்தாள்களில் ஒரு பகுதி விமானம்மூலம் வந்தன

யாழ்ப்பாணம், மார்ச் 28 எதிர் வரும் 30 ஆம் திகதி ஆரம்பமாக இருக்கும் ஜீ. சீ. ஈ. (சாதாரண) பரீட்சைக்கான முதல் நான்கு நாட்களுக்குரிய வினாத்தாள்கள் விமான மூலம் வடக்கிற்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

30 ஆம் திகதி முதல் 7 ஆம் திகதிவரை நடைபெறவுள்ள இந்தப் பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். மாவட்டத்தில் 171 பரீட்சை நிலையங்களில் இப் பரீட்சை நடைபெறும்.

பரீட்சை முடிந்த பின்பும் இணைப்பதிகாரிகளால் விடைத்தாள்கள் எடுத்துவரப்பட்டு பிராந்திய சேகரிப்பு நிலையத்தில் ஒப்படைக்கப்படும்.

நான்கு நாட்களுக்கு ஒரு தடவை ரயில் மூலம் விடைத்தாள்கள் கொழும்புக்கு அனுப்பப்படும். (இ-3)

## "எய்ட்ஸ்" கர்ப்பிணியை பராமரித்தால் பதவியுயர்வு!

எய்ட்ஸ் நோய் பிடித்துள்ள கர்ப்பிணிப் பெண்ணை ஆஸ்பத்திரியில் பராமரிக்கும் தாதிமார் மற்றும் சிற்றூழியர்களுக்கு விசேட பதவி உயர்வு வழங்கப்படும் என்று சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது சம்பந்தமான பேச்சுக்களை ஊழியர்களுடன் சுகாதார அதிகாரிகள் நடத்தி வருகின்றனர்.

அண்மையில் கொழும்பு ஆஸ்பத்திரி ஒன்றில் பிரசவத்துக்காக அனுமதிக்கப்பட்ட கர்ப்பிணிப் பெண்ணைப்பராமரிக்க ஊழியர்கள், தாதிமார்கள் மறுத்து வருகின்றனர்.

ஏற்கனவே ''எய்ட்ஸ்'' பெண்ணை பராமரிக்க முன்வந்த சில தாதிமாருக்கும் சிற்றூழியருக்கும் விசேட பதவி உயர்வு வழங்கப்படவிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனிடையில் சம்பந்தப்பட்ட 'எய்ட்ஸ்' பெண் இன்று அல்லது நாளை பிரசவிக்கக் கூடும் என்று டாக்டர்கள் எதிர்பார்க்கின்றனர். (உ-எ)

## அன்னை நினைவாக சிரமதானம்

வவுனியா, மார்ச் 28 அன்னை பூபதியின் நினைவாக வவுனியா கச்சேரி ஊழியர்கள் கச்சேரி வளவில் கடந்த ஞாயிறன்று சிரமதான வேலைகளில் ஈடுபட்டனர்.

வவுனியா அரச அதிபரின் தலைமையில் சிரமதான நிகழச்சி நடைபெற்றது. (உ- 164 )

## லொறி விபத்து 11 பேர் பலி

சென்னை, மார்ச் 28 கோயம்புத்தூர் அருகே வால்பாறை அருகில் நேற்று இடம்பெற்ற லொறி விபத்து ஒன்றில் 11பேர் உயிரிழந்தனர்.

இவர்களில் [illegible] பெண்கள்.

## மக்கள் வங்கி முகவர்கள் ஊடாக மக்களுக்குக் கடன்

யாழ்ப்பாணம் மார்ச் 28 யாழ் மாவட்டத்தில் மக்கள் வங்கியின் 60 முகவர்களுக்கு ஊடாக பொது மக்களுக்கு கடன் வழங்கும் திட்டத்தை செயற்படுத்த 20 இலட்சம் ரூபாவை மக்கள் வங்கி ஒதுக்கீடு செய்திருக்கிறது.

யாழ் மாவட்டத்தில் மக்கள் வங்கியால் நியமிக்கப்பட்டுள்ள 60 முகவர்களும் தம் வாடிக்கையாளர்களுக்கு கடன்களை வழங்க ஆரம்பித்துள்ளனர்.

இந்த முகவர் திட்டத்துக்கு நல்ல வரவேற்புள்ளதாகவும்—

மக்கள் இதில் கலந்து [illegible] என்றும் மக்கள் வங்கி அதிகாரி ஒருவர் கேட்டுக் கொண்டார். (உ-3)

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், மார்ச் 28 திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தின் மஹோற்சவம் வியாழக்கிழமைகாலை கொடியேற்றத்துடன் ஆரம்பிக்கின்றது.

ஏப்பிரல் 7 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 8 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (க)

## மரண அறிவித்தல்கள்

### தியாகராசா அம்பலவாணர் (தம்பிராசா)

மஞ்சத்தடி, இணுவிலைச் சேர்ந்த திரு. தியாகராசா அம்பலவாணர் (தம்பிராசா) 27 – 03 - 90இல் காலமாகிவிட்டார். இவர் காலம்சென்ற தியாகராசா பார்வதிப்பிள்ளை தம்பதியினரின் மூத்த மகனும், லோகநாயகி, தியாகராசா [லண்டன்], காந்தி[கனடா] சுகுமார் [கனடா], இந்துமதி [கனடா], சிறீதரன் [கனடா], சந்திரகுமார் (மோகன்) [லண்டன்] ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. தி. சண்முகராசாவின் (வை. சி. கடை இணுவில் சந்தி) அன்புச் சகோதரரும், திரு. மகாதேவன் [T. A. கொழும்பு], திரு. கருணானந்தன்[கனடா], கேமாங்கனி[லண்டன்], தங்கா [கனடா], சத்தியா [கனடா], நிம்மி [கனடா], ஆகியோரின் அன்பு மாமனாரும், அருள்வண்ணன், கங்கா நிதி, சங்கர், லக்ஷன், அருந்தா, சாயிசன், சுயன், அபிரா, துஷா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28-03-90ஆந் திகதி (இன்று) புதன்கிழமை காலை 10 00 மணிக்கு மஞ்சத்தடி, இணுவில் கிழக்கு 'ராஜமதி' இல்லத்தில் நடைபெற்று, அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

அ. சந்திரகுமார் (மோகன்)

''ராஜபதி''
மஞ்சத்தடி.
இணுவில் கிழக்கு,
இணுவில். [12228]

### முருகேசு வைரமுத்து

அளவெட்டி தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், மானிப்பாய் தெற்கில் வசித்தவருமான மு. வைரமுத்து J. P முன்னைநாள் சி. சி. எஸ். காலமாகி விட்டார்.

இவர் திருமதி பூமகாலட்சுமியின் அன்புக் கணவரும் திருவாளர்கள்: சிவகுமார், வரதகுமார், நிருத்தகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
மனைவி, மக்கள்,

''குமரபுரம்''
லோட்டன் வீதி,
மானிப்பாய். (சி/4095)

### சின்னத்தம்பி சிவனையா

நாரந்தனையைச் சேர்ந்த திரு. சின்னத்தம்பி சிவனையா 26-03-1990 அன்று சிவபதமடைந்துவிட்டார்.

இவர் ஓய்வுபெற்ற ஊர்காவற்றுறை அரச மரக் கூட்டுத்தாபனத்தின் பொறுப்பாளரும், காலஞ்சென்ற சின்னத்தம்பி சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற வேலாயுதப்பிள்ளை முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருகரும், கண்ணம்மா [தங்கமணி] (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்புக் கணவரும், மஞ்சுளா (டென்மார்க்), சூரியகலா (பிரான்ஸ்), ஜெயகலா (அமெரிக்கா), சசிகலா (பிரான்ஸ்), சுகந்தி (பிரான்ஸ்), ராஜேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சிவகுரு [நடராசா], பொன்னம்மா, கனகசபை, நவமணி, கண்ணம்மா, சரஸ்வதி, காலஞ்சென்ற கனகரெட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சுப்பிரமணிய பிள்ளை, காலஞ்சென்ற லக்சுமி பவான் உரிமையாளர் சிவகுரு, காலஞ்சென்ற கனகம்மா, குலக்கொழுந்து ஆகியோரின் அன்பு மைத்துனரும், யோகீஸ்வரன் (டென்மார்க்), நடராஜா (பிரான்ஸ்), ஜெஸ்விராஜன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமனாரும், சாம்பவி, ஆரபி, நிஷாந்தி ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆவார்.

ஈமக்கிரியைகள் 28-03-1990 இன்று காலை 10-00 மணியளவில் நடைபெறும். இதை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

தகவல்:

நாரந்தனை வடக்கு,
ஊர்காவற்றுறை.

அருள் கோணேஸ் [2981]

### செல்லப்பா முத்தையா

திரு. செல்லப்பா முத்தையா காலமானார்.

இவர் சிவபாக்கியத்தின் கணவரும், திருமதி நா. பாஸ்கரன், திருவாளர்கள் திருநாவுக்கரசு, பரமசிவம், பாலகுமார், சிவந்தன், செல்விகள் சற்குணேஸ்வரி, ஜெகதீஸ்வரி, விக்னேஸ்வரி ஆகியோரின் தந்தையாரும், திரு. பாஸ்கரன். திருமதிகள் ப. பிறேமா, பா. சொரூபவதி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 28-03-1990 புதன் கிழமை இன்று காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச்செல்லப் படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி

''அயோத்தி''
சாவல்கட்டு ஒழுங்கை,
ஆனைக்கோட்டை. [12234]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர்வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 28 - 03 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org